பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 24 திங்கட்கிழமை 09.11.2020 கதிர் 04

### இனிது ரகசியம் அல்ல!

இப்போது பரபரப்பாக பேசப்படும் விடயங்களில் ஒன்று அமெரிக்காவின் உப ஜனாதிபதி பதவிக்குத் தெரிவாகியிருக்கும் முதல் பெண் மணியின் இனம் பற்றியதாகும்.

இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமா பக்கம் 02

## இலங்கையில் நேற்றும் 510 பேருக்குத் தொற்று

### கொரோனாவின் மூன்றாவது அலைக்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இலக்கு

நாட்டில் நேற்று மட்டும் 510 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, கொரோனாவின் மூன்றாவது அலையில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 455 ஆக அதிகரித்துள்ளது. பக்கம் 02

## சரத் வீரசேகரவுக்கு முழு அமைச்சு! விரைவில் கிட்டும்



மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி பக்கம் 02

## 35 ஆக உயர்ந்தது கொரோனாச் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றும் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

78 வயதுடைய ஆண் நபரே சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் இறந்துள்ளார்.

பிரேத பரிசோதனைகளின் மூலம், அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது பக்கம்02

# பைடனுக்கு மிக முக்கிய வெற்றி தமிழ்க் கூட்டமைப்பு மகிழ்ச்சி!

## கமலாவுக்கும் சேர்த்து வாழ்த்து



கொழும்பு, நவம்பர் 09

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன் ஜனாதிபதியாகவும், இந்திய தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹரிஸ் அமெரிக்காவின் முதலாவது பெண் துணை ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாழ்த்துத் தெரிவித்துள்ளது. பக்கம் 02



## ஒரு மீற்றரைத் தாண்டியது சமூக இடைவெளித் தூரம்!

### இனிமேல் ஒன்றரை அல்லது இரண்டு மீற்றர்

இலங்கையில் கொரோனா வைரஸ்மேலும்பரவாமல் இருக்க அமுல்படுத்தப்பட்டுள்ள சமூக இடைவெளி தூரம் ஒரு மீற்றரில் இருந்து அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் பக்கம் 02

## 'கொரோனா' தொடர்ந்து பரவுவதற்கு அரசின் தவறான முடிவுகளே காரணம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

இலங்கை அரசின் தவறான முடிவுகளே நாட்டில் கொரோனா வைரஸ் தொடர்ந்தும் பரவுவதற்குக் காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸின் மூன்றாவது அலை கட்டுப்படுத்தப்படும் தருணத்தில் நான்காவது அலை உருவாகிவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெருமளா பக்கம் 02

## ஐ.நாவின் இலங்கைக்கான முன்னாள் வதிவிடப் பிரதிநிதி நந்தி காலமானார்



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான முன்னாள் வதிவிடப்பிரதிநிதி சுபினே நந்தி நேற்று காலமானார்.

25 ஆண்டுகளுக்கும் மேலாக ஐ.நாவின் அமைப்புகளுடன் பணியாற்றியுள்ள சுபினே நந்தி, 2011 முதல் பக்கம் 02

## ஊரடங்கைத் தளர்த்துவதா?

### எதிரணி பாய்ச்சல்

கொரோனா வைரஸ் நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துவரும் நிலையில் மேல் பக்கம் 02

## வெலிக்கடை சிறைச்சாலையில் 102 பேருக்கு கொரோனா உறுதி

### நேற்றும் 72 பேர் அடையாளம்

வெலிக்கடை சிறைச்சாலையில் மேலும் 72 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுக்கும் பக்கம் 02

## தொற்றிலிருந்து விடுதலை வேண்டி பெருமாள் கோவிலில் விசேட யாகம்



கொரோனா நோயிலிருந்து விடுபட தெய்வ அருள் வேண்டி இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழில் மாபெரும் யாகம் நடாத்தப்பட்டது.

கொரோனா பக்கம் 02

## உடற்கல்வித் துறையில் பட்டப்படிப்பை ஆரம்பிக்க விளையாட்டுத்துறை அமைச்சரின் தலையீடு தேவை

### யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 09

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்களில் முன்னேற்றத்தைக் காண்பதற்கு துறைசார் வல்லுநர்களை உருவாக்கும் வகையில் யாழ்ப்பாணப் பக்கம் 02





Kamala Harris, back row at left, in an undated family photo. Next to her, from left, are her grandmother Rajam Gopalan, grandfather P.V. Gopalan and sister, Maya Harris. With them are Maya's daughter, Meena, left, and Harris' cousin Sharada Balachandran Orihuela. (Courtesy of Sharada Balachandran Orihuela)

பின்னுக்கு அமர்ந்திருப்பவர்களில் இடது புறத்தில் முதலாவதாக கமலா ஹாரிஸ், அடுத்து அம்மம்மா ராஜம் கோபாலன், அம்மப்பா பி.வி.கோபாலன், சகோதரி மாயா ஹாரிஸ். முன்னால் மாயா ஹாரிஸின் மகள் மீனா, மைத்துனி சாரதான பாலச்சந்திரன்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கறுப்பினத்தவர் என்று கூறப்பட்டாலும், அவரின் பெற்றோரில் ஒருவரே கறுப்பு இனத்தவர்.

ஆனால், கமலா ஹாரிஸின் பெற்றோர் இருவருமே வெள்ளையர்கள் அல்லர் என்பதால், முழுமையான கறுப்பினப் பெண் உப ஜனாதிபதியாகின்றார் என்ற அளவில் பேசப்படுகின்றது.

கமலா ஹாரிஸின் தந்தையார் டொனால்ட் ஹாரிஸ் ஜமெய்கா நாட்டின் கறுப்பி னத்தவர் என்பது தெரிந்ததுதான். அதிலும் ஒரு சிக்கலைத் தேர்தல் சமயத்தில் கமலா ஹாரிஸ் எதிர்கொண்டார். கமலா ஹாரிஸின் தந்தையார் டொனால்ட் ஹாரிஸின் பூர்வீகத்தை ஜமெய்காவில் தேடிய ஆய்வாளர்கள் சிலர் ஒரு 'கண்டுபிடிப்பை' வெளியிட, அதுவும் பெரும் சர்ச்சையாயிற்று.

கடந்த நூற்றாண்டுக்கு முன் ஜமெய்காவிலும் நீடித்த அடிமைகள் விற்பனை வர்த்தகத்தில் டொனால்ட் ஹாரிஸின் மூதாதையர்கள் விற்பனை முகவர்களாக இருந்து பணம் சம்பாதித்தனர் என்று தொடங்கி, அவரது கலப்பின வரலாறு வரைப் பல பிரச்சினைகள் கிளப்பப்பட்டன. ஆனால் அவற்றை எல்லாம் சமாளித்துக் கடந்த கமலா ஹாரிஸ் இன்று வென்றிருக்கின்றார்.

ஆனால், இத்தகைய நெருக்கடிப் பதிவுகள் எல்லாம் அவரது தாய் வழியில் இருக்கவில்லை.

அவரது தாயரான ஷியாமளா கோபாலன் சென்னையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர், அதனால் இந்து முறைப்படி வளர்ந்தவர் கமலா ஹாரிஸ், இப்போது ஒரு யூதரைத் திருமணம் செய்திருக்கின்றார். அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை, ஆனால் கணவர் டக்ளஸ் எம்ஹோவின் முன்னைய தாரம் மூலமான இரண்டு பிள்ளைகளுக்கும் இப்போது சிற்றன்னை அவர்தான்.

கமலா ஹாரிஸ் அம்மையாரின் தாய் வழிப்பூர்வீகம் குறித்து, நாங்கள், ஊடக ஜாம்பவான் என்று எப்போதும் மதிக்கும் அமரர் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவின் மகன் உதயநாயகம் அவர்கள் ஆங்கில மொழியிலான விவரத்துடன் புதிய தகவல் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

அதன் படி -

கமலா ஹாரிஸ் அம்மையாரின் தாய் வழி மூலம் இந்தியா அல்ல. இலங்கை என்பதுதான் அந்தத் தகவல்.

கமலா ஹாரிஸின் தாயின் தந்தையார் (ஷியாமளா கோபாலின் தந்தையார்) யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த பி.வி.கோபாலன். அதாவது கமலா ஹாரிஸின் அம்மப்பா மானிப்பாயைச் சேர்ந்தவர்.

மறுபுறம் அம்மம்மா (பி.வி.கோபாலனின் துணைவியார்) ராஜம் கோபாலன் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

பி.வி.கோபாலன் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் சிவில் சேவையில் இருந்தவர். பின்னர் குடும்பத்துடன் சென்னைக்கு இடம் பெயர்ந்தார். அச்சமயம்தான் ஷியாமளா கோபாலன் (கமலா ஹாரிஸின் தாய்) சென்னையில் பிறந்தார்.

பின்னர் கோபாலன் தனது குடும்பத்துடன் புதுடில்லிக்கும், அங்கிருந்து கலிபோனியாவுக்கும் இடம்பெயர்ந்தார். அப்போது கமலா ஹாரிஸின் தாயார் ஷியாமளா கோபாலனுக்கு வயது 19.

பி.வி.கோபாலன் இந்தியாவில் மட்டுமல்லாமல், ஸாம்பியாவிலும் கூட சிவில் சேவையில் பணியாற்றியிருக்கின்றார்.

கலிபோனியாவில் ஷியாமளா கோபாலன், டொனால்ட் ஹாரிஸனைக் கைபிடித்து, ஷியாமளா ஹாரிஸானார்.

அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தன. மூத்தவர் கமலா ஹாரிஸ். இளையவர் மாயா ஹாரிஸ்.

கறுப்பினப் பெண் நாட்டின் முதல் உப ஜனாதிபதி என்று பேசப்படுவதால் அவரின் பூர்வீகம் குறித்து பல தரப்புகளிலும் விசாரணைகள், ஆய்வுகள் முடுக்கி விடப்படுகின்றன.

இது கொரேனா வைரஸ் காலம். பிற நாடுகளில் இருந்து இங்கு ஆய்வாளர்கள் நேரடியாக வருவது சாத்தியப்படாது.

அதனால் இங்கு இருக்கின்ற மரபுரிமை ஆய்வாளர்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாம்.

பி.வி.கோபாலன், ராஜம் கோபாலன் என்ற பெயர்களைத் தூக்கிக் கொண்டு மானிப்பாய், மட்டக்களப்புப் பூர்வீகங்களைத் தேடும் முயற்சிகள் நிபுணத்துவ மட்டத்தில் ஆரம்பிக்கப்படாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.!

– மின்னல் –

## 35 ஆக உயர்ந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொரோனா தொற்றுடன் ஏற்பட்ட மாரடைப்பே குறித்த நபர் உயிரிழப்பதற்குக் காரணம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார்.

இதையடுத்து இலங்கையில் கொரோனா வைரஸால் பலியானவர்களின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது.

## வெலிக்கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தேசிய செயற்பாட்டு மையம் இதனை அறிவித்துள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 63 பெண் கைதிகளும், 8 ஆண் கைதிகளும் ஒரு சமையல்காரரும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறையில் ஏற்கனவே 29 கைதிகளுக்கும், சிறை அதிகாரி ஒருவருக்கும் என 30 பேருக்குக் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டிருந்தது. அதற்கமைய தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 102 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் போகம்பறை சிறைச்சாலையில் 7 கைதிகளுக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்நிலையில் நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 929ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று மட்டும் 562 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 8 ஆயிரத்து 285 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இன்னும் 5 ஆயிரத்து 609 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 35 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சரத் வீரசேகரவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இராஜாங்க அமைச்சர், றியர் அட்மிரல் சரத் வீரசேகர விரைவில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது. பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற சரத் வீரசேகர, சட்ட அமுலாக்கல் குறித்த பொறுப்புகளுடனான அமைச்சராக பதவி உயர்வு பெற வாய்ப்புள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தொற்றிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொடிய தொற்று நோயிலிருந்து நாடும் மக்களும் மீண்டு வரவேண்டும் என்பதற்காக சகல இந்து ஆலயங்களிலும் ஹோமம், விசேட வழிபாடுகளை செய்யும் வண்ணம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கைக்கமைவாக நேற்று ஞாயிறுக்கிழமை மாலை 4.30 மணிக்கு வண்ணார்பண்ணை பெருமாள் ஆலயத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட இந்து குருமார் ஒன்றியத்தினால் சுதர்சன ஹோமமும் விசேட வழிபாடுகளும் சுகாதார நடைமுறைக்கு அமைவாக நடைபெற்றன.

சுகாதாரப் பாதுகாப்புக் கருதி யாகத்தில் பொதுமக்கள் யாரும் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

## ஒரு மீற்றரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜயருவன் பண்டார இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய ஒரு மீற்றர் உள்ள சமூக இடைவெளியை ஒன்றரை மீற்றர் அல்லது இரண்டு மீற்றராவது அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் பரிந்துரை செய்துள்ளார்.

## ஐ.நாவின் இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

2016ஆம் ஆண்டு வரை இலங்கையில் பணியாற்றியுள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் இலங்கையில் நல்லிணக்கத்தை நோக்கிய நீடித்த அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை வளர்ப்பதில் ஐ.நாவின் முயற்சிகளுக்கு தலைமை தாங்கியதுடன், ஐ.நா. சபையில் இலங்கைக்கான சட்ட ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார்.

அவர் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட முன்னர் சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கான ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் பிராந்திய பணிப்பாளராகப் பணியாற்றினார்.

மேலும் ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளுக்கான ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் பிராந்திய பணியகத்தில் பிராந்திய திட்டம் மற்றும் கொள்கை பிரிவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

அத்தோடு துர்க்மெனிஸ்தானுக்கான துணை வதிவிடப் பிரதிநிதியாகவும், பங்களாதேஷ் நாட்டுக்கான உதவி வதிவிடப் பிரதிநிதியாகவும் பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

## 'கொரோனா' தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வானவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் அவர்கள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படாததை தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசு தற்போது பின்பற்றும் நடைமுறைகள் காரணமாக மேலும் பலர் பாதிக்கப்படும் ஆபத்துள்ளது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஊரடங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாகாணத்தில் ஊரடங்கைத் தளர்த்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளமை குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

பொதுமக்களின் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்த விடயத்தில் அரசு பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசை நம்பியிருக்காமல் மக்கள் தங்கள் உடல்நலத்தையும் பாதுகாப்பையும் உறுதிசெய்ய வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பைடனுக்கு மிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சி என்ற வகையில் இந்த வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளது.

அமெரிக்காவில் மிக முக்கியமான வெற்றியை (Momentous Victory) பெற்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜோ பைடனுக்கும், துணை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கமலா ஹாரிஸுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராட்டையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது எனவும் அந்த ருவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உடற்கல்வித் துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பல்கலைக்கழகத்தில் உடற்கல்வித் துறையில் பட்டப்படிப்பை தொடங்குவதற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் தலையிட வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுடனான கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத் திட்டத்தில் சமூக உட்கட்டமைப்புக் குழுவின் கூட்டம் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இளைஞர்களின் எதிர்காலம் குறித்தும், போதைப் பாவனையிலிருந்து இளையோரை மீட்கும் நடவடிக்கைகள் பற்றியும் பேசிய விளையாட்டுத் துறை அமைச்சர் கூட்டத்திலிருந்தவர்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்ட சமயத்திலே துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், இளைஞர்களின் எதிர்காலம் குறித்து அமைச்சர் காட்டும் கரிசனை வரவேற்கத்தக்கதாகும், திறன் விருத்திக்கு ஏற்றவகையில் பலநோக்குச் செயலணிகளை உருவாக்குவதற்கும், விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்கும் அமைச்சின் முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டுமாயின், அதற்கான தகுதிவாய்ந்த ஆசிரியர்களை – பயிற்றுநர்களை உருவாக்க வேண்டும். அதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தயாராகவே இருக்கிறது. அதற்குத் தேவையான சகல வளங்களும் எமது பல்கலைக்கழகத்தில் உண்டு. எதிர்வரும் 19 ஆம் திகதி நவீன வசதிகளுடன் கூடிய உள்ளக விளையாட்டரங்கு ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் மானுடவியல், பௌதிக விஞ்ஞானம் ஆகிய துறைகளோடு உடற்கல்வித்துறையையும் ஆரம்பிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. எனினும் கால ஓட்டத்தில் உடற்கல்விப் பட்டப்படிப்பை நடத்துவதற்கு முடியாமல் போய்விட்டது. அதன் பின் உடற்கல்விப் பட்டப்படிப்பை ஆரம்பிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் மூன்று முறை வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைமை அடிக்கடி மாறிக் கொண்டிருந்ததனால் அது தாமதமாகிறது. தற்போதைய தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவின் காலத்தினுள் அது சாத்தியமாகும் என நம்புகிறோம். எனினும் விளையாட்டுத் துறை சார்ந்த அமைச்சர் என்ற வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியில் பட்டப்படிப்புக் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு, இந்த விடயத்தில் தலையிட்டு உதவி செய்ய வேண்டும் என்று துணைவேந்தர் கேட்டுக்கொண்டார்.

# நாட்டை உடன் முடக்குங்கள்!

## அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை

மக்களின் ஆணையுடன் ஆட்சிக்கு வந்த அரசு, கொரோனா என்ற கொடிய தொற்று நோய்க்குள் அவர்களைச் சாக டிப்பது மாபெரும் குற்றமாகும். முழு நாட்டையும் குறைந்தது இரு வாரங்களுக்காவது முடக்கி கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

– இவ்வாறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ எம். பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. ஆகியோர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாம் அலை கடும் வீரியத்துடன் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

நாடெங்கும் கொரோனா கொத்தணிகள் வியாபித்து அவை சமூகத் தொற்றாகி வீடுகளுக்குள் புகுந்துள்ளன.

நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலைக்குள் மாத்திரம் சிக்கி இதுவரை 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கொரோனாவின் முத லாம், இரண்டாம், மூன்று அலைகளுக்குள் சிக்கி மொத்தமாக 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள் ளனர்.

நாடெங்கும் தற்போதும் மூன்றாவது அலை உச்சக்கட்டமாகப் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. இந்த அலையில்தான் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாள்தோறும் நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

ஆனால், இது தொடர்பில் அரசு அசமந்தப்போக்கில் செயற்படுகின்றது. மேல் மாகாணத்தை மட்டும் 9 ஆம் திகதி வரை முடக்கி வைத்துள்ளது. 9 ஆம் திகதிக்குப் பின்னர் மேல் மாகாணத்தையோ அல்லது முழு நாட்டையோ முடக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஜனாதிபதியும், இராணுவத் தளபதியும் அறிவித்துள்ளனர். அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் சிறு பிள்ளைத்தனமாக உள்ளது.

மக்களின் வாழ்வாதாரத்துக்கு நிவாரணப் பொருள்களை வழங்குவது அரசின் கடமை. அதேவேளை, மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதும் அரசின் கடமை.

கொரோனாத் தொற்று உயிர்ப்பலியை எடுத்து வருகின்ற இந்த நிலையிலும் முழு நாட்டையும் முடக்காமல் அரசு திறந்து வைத்திருக்கின்றது. எனவே, கொரோனாவுக்குள் மக்களைச் சாகடிக் காமல் முழு நாட்டையும் குறைந்தது இரு வாரங்களுக்காவது முடக்கி தொற்றுப் பரவலுக்குள் அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்களின் ஆணையுடன் ஆட்சிக்கு வந்த அரசு, கொரோனா என்ற கொடிய தொற்று நோய்க்குள் அவர்களைச் சாக டிப்பது மாபெரும் குற்றமாகும். இதை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும் – என்றனர்.

## தமிழர் பிரச்சினையைக் கையாள துறைசார் நிபுணர் குழு வேண்டும்

### கூட்டமைப்பிடம் இந்தியா கோரிக்கை

தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்காக துறை சார் நிபுணர் குழுவொன்றை நியமிக்குமாறு இந்திய இராஜதந்திர தரப்புக்கள் தமிழ்த் தேசிக் கூட்டமைப்பிடம் கோரியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள், பண்பாடு, கலாசார ரீதியாக ஆக்கிரமிக்கப்படும் செயற்பாடுகள் அல்லது திட்டமிட்டு மாற்றியமைக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுடனான பல்வேறு தொடர்பாடல்கள் மற்றும் சந்திப்புக்களின்போது இராஜதந்திர தரப்புக்களிடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்தே தமது தரப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்காகக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுக்கு அப்பால் துறைசார்ந்த குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் இராஜதந்திர தரப்புக்களால் கோரப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

அந்தக் கோரிக்கைக்கு அமைவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் விரைவில் குழுவொன்று நியமிக்கப் படவுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் குழுவானது, மக்கள் பிரச்சினைகளை முக்கியத்துவத்தின் அடிப்படையில் உரிய தரவுகளுடன் கிரமமாக ஆவணப்படுத்தவுள்ளது.

இதில் மாகாண சபை முறைமையில் உள்ள குறைபாடுகள் மற்றும் அதனை முழுமையாக நடைமுறைப் படுத்தல், இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட முக்கிய விடயங்களும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து இராஜதந்திர தரப்புக்களின் மூலம் அவற்றை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதை இலக்காகக்கொண்டு செயற்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஹொரணை ஆடைத்தொழிற்சாலையில் மேலும் 81 பேருக்கு கொரோனா உறுதி!

ஐயாயிரத்து 600 இற்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றும் ஹொரணை குருகொட ஆடைத்தொழிற்சாலையில் மேலும் 81 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கடந்த (சனிக்கிழமை) கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், அங்கு பதிவான கொரோனா நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 159ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தொழிற்சாலையில் பணியாற்றும் இன்னும் இரண்டாயிரம் பேருக்கான பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளிவரவுள்ளன என ஹொரணை நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் பி.சி.சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

### தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளோர்

## வீடுகளை விட்டு வெளியேற எந்த சூழ்நிலையிலும் அனுமதி இல்லை!

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் எந்த சூழ்நிலையிலும் அந்த பகுதிகளில் இருந்து வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்கள் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மருத்துவ உதவி தேவைப்படும் கொரோனாத் தொற்று அறிகுறி கொண்டவர்கள் மட்டும் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற தங்கள் வீடுகளை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளுக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ யாருக்கும் அனுமதி இல்லை என்றும் அவசியம் ஏற்படின் பொலிஸாரின் அனுமதி பெறப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்படும் வரை வேலைக்கு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர் அறிவித்துள்ளார்

## நவீன வசதிகளுடன் உள்ளக விளையாட்டரங்கு யாழ். பல்கலைக் கழகத்தில் விரைவில் திறப்பு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான உள்ளக விளையாட்டு அரங்கு எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

நாட்டில் தற்போது எழுந்துள்ள கொரோனா நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளுக்கமைய மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் இந்தத் திறப்பு விழாவை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமையுடன், நிகழ்வுகளை நேரலையாக ஒலிபரப்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய துணைவேந்தரும், முன்னாள் விஞ்ஞான பீடாதிபதியுமாகிய பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா,இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு விழாவுக்கான ஏற்பாட்டுக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட திட்டமுன் மொழிவுக்கமைய 2017 ஆம் ஆண்டு முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணத்தால் அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது. நிறைவு செய்யப்பட்ட கட்டடத் தொகுதி 2020 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் அமர்ந்திருக்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கு சர்வதேசத்தர நியமங்களுக்கமைய அமைக்கப்பட்டிருக்கிறது. பேராதனை மற்றும் ருகுண பல்கலைக்கழகங்களில் உள்ளக விளையாட்டரங்குகள் காணப்படுகின்ற போதிலும், இலங்கையில் வேறெந்தப் பல்கலைக் கழகங்களிலும் இத்தகைய வசதிகளைக் கொண்ட உள்ளக விளையாட்டரங்கு இது வரை அமைக் கப்படவில்லை. சுமார் 20 கோடியே 80 லட்சம் ரூபா செலவில் இந்த விளையாட்டரங்கு அமைக் கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மைதானத்தின் தென்கிழக்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கின் திறப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக் கிழமை பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் கல்வெட்டைத் திறந்து வைக்க, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா உள்ளக விளையாட்டரங்கைத் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மட்டுமல்லாமல், தேவைநாடும் சகலரும் இந்த உள்ளக விளையாட்டரங்கைப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து, அனுமதி பெற்று இங்குள்ள உள்ளக விளையாட்டு வசதிகளை விளையாட்டுத்துறை சார்ந்தோர் பயன்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கின் இடப்பற்றாக்குறை காரணமாகப் பல அமர்வுகளாக நடத்தப்படும் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை இம்முறை ஒரே நாளில் இந்த அரங்கில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

## வவுனியாவில் கிராம அபிவிருத்தி உட்கட்டமைப்பு வேலை ஆரம்பம்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சிந்தனையில் உதயமாகிய 'சுபீட்சத்துக்கான நோக்கு' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் கிராம மட்டத்திலான சமூக பொருளாதார, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் மூன்று அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களையும் அதனோடு இணைந்த இராஜாங்க அமைச்சர்களையும் உள்ளடக்கியவாறு நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டு வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு அந்தக் குழுக்கள் விஜயம் செய்துள்ளன.

இதனை அடிப்படையாகக் கொண்டு வன்னி மாவட்டத்தை மையப்படுத்தி மாவட்ட மட்டத்திலான மாவட்ட செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச உயரதிகாரிகள் ஆகியோருடனான கிராமிய அபிவிருத்தி உட்கட்டமைப்பு சம்பந்தமான விடே கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நெடுஞ்சாலை துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வட மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ், கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஸா, கிராமிய மற்றும் பிரதேச நீர் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்கள், அகழிகள் மற்றும் குடியிருப்பு, பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஸ்ரீபால கம்லத், கிராமிய வீடமைப்பு பிராந்திய உறவுகள் நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருந்த ஆகியோருடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கு. திலீபன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வைரஸுடன் வாழுதல்!

**கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் சில தீர்க்கமான முடிவுகளை இலங்கை அரசு – ஆட்சிப் பீடம் – எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.**

**இந்தக் கொள்ளை நோய்க்குக் காரணமான வைரஸ் பரவத் தொடங்கியதுமே அதனை எதிர்கொள்வதற்கான வழி வகைகளை நாடுகள் வகுத்துக் கொண்டன.**

**ஒவ்வொரு நாடும் இந்தப் பிரச்சினையை ஒவ்வொரு விதமாக அணுகியது. தடுப்புக்கான நடவடிக்கைகள் கூட வித்தியாசமாக அமைந்தன. தடுப்பு விடயம் தொடர்பில் அந்தந்த நாடுகளின் சிந்தனைப் போக்குக்கும் சாத்தியப்பாடுகளுக்கும் அமைவாகத் திட்டங்கள் வகுக்கப்பட்டன.**

**இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவும், இலங்கையும் கூட வித்தியாசமான அணுகு முறையைக் கைக்கொண்டமையை நாம் அவதானிக்க முடிந்தது.**

**கொள்ளை நோய் வைரஸ் பரவுகின்றது என்றதும் அனேகமான எல்லா நாடுகளுமே – இலங்கை உட்பட – தமது எல்லைகளை மூடின. வெளிநாட்டு பயணிகள் வருகையைத் தடை செய்தன.**

**ஆரம்பத்தில், தொற்றாளர்களைத் தேடிப் பிடித்து தனிமைப்படுத்துவதன் மூலம் பிறருக்கு கொரோனாத் தொற்றுப் பரவாமல் முழுமையாகத் தடுத்து, நிலைமையைக் கட்டுப்படுத்தலாம் என்றும் கூட அவை முயன்றன.**

**ஆனால் அது சாத்தியமற்றது – அதுவும் பல கோடி மக்கள் கூட்டம் கொண்ட – மற்றைய அயல் நாடுகளுடன் பல ஆயிரம் கிலோ மீற்றர் எல்லைகளைக் கொண்ட – பாரதம் முழுமையாகத் தடுக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட இந்தியா ஆரம்பத்திலேயே இவ்விடயத்தில் இரட்டை அணுகுமுறையைப் பின்பற்றியது.**

**ஒன்று – வெளியில் இருந்தும், உள்நாட்டிலும் தொற்றுப் பரவலை இயன்றவரை கட்டுப்படுத்துதல்.**

**அடுத்தது – தவிர்க்க முடியாத இந்தத் தொற்றுப் பரவலை இயன்றவரைக் கட்டுப்படுத்தி, அதன் தாக்கத்தையும் இழப்புகளையும் குறைத்து, அதனுடன் சேர்ந்து வாழப் பழகிக் கொள்ளுதல்.**

**இந்த இரட்டை அணுகு முறைதான் இந்தியா போன்ற நாடுகளில் இப்போதும் கைக்கொள்ளப்படுகின்றது. அத்தகைய நாடுகளில் அதுதான் சாத்தியம்.**

**கொரோனாத் தொற்றுப் பரவலை அடுத்து வெளிநாடுகளில் சிக்கிக் கொண்ட தனது பல லட்சம் பிரஜைகளை நாட்டுக்குத் திருப்பி அழைத்து – மீட்கும் – 'வந்தே பாரத்' திட்டத்தின் கீழ், பதினைந்து லட்சத்துக்கு மேற்பட்டோரை நாட்டுக்குள் மீளக் கூட்டிவந்துள்ளது இந்தியா.**

**ஆனால், அப்படி திரும்புபவர்கள் அனைவருக்கும், இலங்கையில் இருப்பது போல, அரச படைகள் மற்றும் பொலிஸாரின் கண்காணிப்பில் இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தும் மையங்களை இந்தியாவினால் அமைக்க முடியவில்லை.**

**மாறாக, 72 மணி நேரக் கண்காணிப்புக்குப் பிறகு அவர்களை அவரவர் வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவது போன்ற ஒரு திட்டத்தையே பாரதம் பின்பற்றியது.**

**இலங்கை ஆரம்பத்தில் வலு இறுக்கமான கட்டுப்பாடுகளை முன்னெடுத்து, முழு நாட்டையுமே பல வாரங்களுக்கு முடக்கியது. நாட்டுக்குள் கொரோனாத் தொற்றுப் பரவல் இல்லை என்ற நிலைமையைப் பேண முடியும் எனும் எதிர்பார்ப்பில் – நம்பிக்கையில் – அது விடயங்களைக் கையாண்டது.**

**தொற்றுக்குள்ளானவர்ளுடன் பழகிய முதல் தரப்பினரைக் கூட அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தனிமைப்படுத்தல் மையங்களில் வைத்து இரண்டு வாரங்கள் கண்காணிக்கும் நடைமுறையை முன்னெடுத்தது.**

**ஆனால், எதை, எப்படி செய்தாலும் கொரோனாப் பரவல் கட்டுப்படுத்தல் நூறு வீதம் சாத்தியமற்றது என்பது புரியத் தொடங்கியதும், நாட்டு மக்களின் வாழ்வுக்கும் கொரோனாப் பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கும், இடையில் ஒரு சமநிலையை – மாற்று ஏற்பாட்டை – நோக்கி ஆட்சிப்பீடம் நகரத் தொடங்கியிருப்பதாகத் தெரிகின்றது.**

**இரண்டு வாரங்கள் அல்லது இரண்டு மாதங்கள் நாட்டை முழுவதுமாக முடக்கி, மிக இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்தால் கொரோனா வைரஸ் பரவலை முற்றாகக் கட்டுப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கை – உறுதி – தெளிவு – இருக்குமானால் அதனைச் செய்து விடலாம் என்பதுதான் பொதுவான நிலைப்பாடு.**

***"ஆனால் கொரோனா வைரஸுடன் குறைந்தது இன்னும் இரண்டு ஆண்டுகளாவது நாம் வாழ வேண்டியிருக்கும். அதற்கேற்ப பொது மக்கள் கொரோனாவுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்."***
**– என்று சுகாதார அமைச்சின் செயலாளர் ஜயருவன் பண்டார கூறுகின்ற விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கின்றது.**

**ஆரம்பத்தில் இறுக்கமான, தீவிரமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், முடக்க ஏற்பாடுகள் மூலம் வைரஸ் பரவலை முழுமையாக அடக்க முயன்ற அரசு, அதன் சாத்தியங்கள், யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு, இப்போது அதனுடன் சேர்ந்து வாழப் பழகிக் கொள்ளும் – இந்திய நடைமுறையை – நோக்கி நகர விரும்புகின்றது என்றே தோன்றுகின்றது.**

**அரசின் பிந்திய அறிவிப்புகள், ஒழுங்குகள் அந்த உண்மையைத்தான் எமக்கு எடுத்தியம்பி நிற்கின்றன.**

# நெடுந்தீவு மக்களின் எதிர்பார்ப்பு விரைவில் நிறைவேற்றித்தரப்படும்!

## டக்ளஸ் தேவானந்தா உறுதி



நெடுந்தீவு பிரதேசத்துக்கான போக்குவரத்து மற்றும் குடிதண்ணீர் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாக ஏற்கனவே அமைச்சரவையில் கலந்துரையாடி, அடுத்த வருடத்துக்கான வரவு – செலவு திட்டத்தில் அது உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இன்னும் சில வருடங்களில் நெடுந்தீவு மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் கலந்துரையாடல் குறித்த குழுவின் தலைவரும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான ஜோன்ஸ்ரன் பெனான்டோ தலைமையில் கடந்த (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு குழுவான கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு குழுவின் இன்றைய கூட்டத்தில், நெடுந்தீவு பிரதேச சபை தலைவரால் தமது பிரதேசத்துக்கான போக்குவரத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்ட நிலையிலேயே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற் குறித்த விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும்,கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு பூரணமாக நிதி வழங்கப்படாமையால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் நலன் கருதி, அந்த வீடுகளுக்கான மீதித் தொகையை வழங்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர் என வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுரத்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் அந்த வீடமைப்புத் திடடங்கள் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட காணிகளில் அமைக்கப்பட்டிருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சிய தொகை வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் பிரஸ்தாபித்திருந்த நிலையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அனைத்து வீடுகளுக்கும் மின்சார இணைப்பு வழங்கும் வேலைத் திட்டத்தை விரைவில் நிறைவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெனாண்டோ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3 ஆயிரம் வீடுகளும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 ஆயிரம் வீடுகளும் மின்சார இணைப்பு இன்றிக் காணப்படுகின்றன.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார விதிகளைப் பின்பற்றி தீபாவளியைக் கொண்டாடுங்கள்!

எதிர்வரும் தீபாவளி பண்டிகைக் கொண்டாட்டத்தின்போது சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு இந்து மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சகல இந்து மக்களிடமும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீதரன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதேவேளை, தீபாவளிப் பண்டிகையை வீடுகளில் இருந்து தமிழ் மக்கள் கொண்டாட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

இந்துக்களது பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளிப் பண்டிகையானது இம்மாதம் 14ஆம் திகதி உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படவுள்ளது.

# ஜோ பைடனுக்கு சஜித் வாழ்த்து!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பைடனுக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன், 290 இடங்களைப் பெற்று 46 ஆவது ஜனாதிபதியாகவும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதியாகவும் பதவியேற்கவுள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வாகியுள்ள ஜோ பைடனுக்கும், துணை அதிபராக தேர்வாகியுள்ள கமலா ஹாரஸுக்கும் ஏனைய நாடுகளை சேர்ந்த தலைவர்கள் தங்களது வாழ்த்துக்களைத்



தெரிவித்து வருகின்றனர்.

அதேபோன்று, சஜித் பிரேமதாஸவும் ஜோ பைடனுக்கு வாழ்த்து தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த வாழ்த்து அறிக்கையில், 'உங்கள் வரலாற்று வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020

'பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்.'
– பிராங்க் லோயிட் றைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)

# அமைச்சர்கள் வருகையால் கொரோனா தொற்றாதாம்!

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



அமைச்சர்கள் வருகையால் கொரோனா தொற்றும் என்ற அச்சநிலை தேவையற்றது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டும் அனைத்து சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றியுமே வந்திருந்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பியிருந்த கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் தொற்று இலங்கையில் மட்டுமல்லாது உலகம் முழுவதும் பரவியுள்ள ஒரு தொற்றாகும்.

இந்நிலையில், இலங்கையில் இந்தத் தொற்று இந்த ஆண்டின் முற்பகுதியில் ஏற்பட்டபோது அதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வெற்றிகரமாக எதிர்கொண்டு கட்டுப்படுத்தியிருந்தது.

ஆனாலும், ஒரு சில காரணங்களால் அந்தத் தொற்று இலங்கையில் மீண்டும் பரவியுள்ளது. இதையும் அரசாங்கம் கட்டுப்படுத்தும் என்ற நம்பிக்கை அனைத்து மக்களிடையேயும் உண்டு.

அதேபோல், இந்தத் தொற்று ஒரு சிலரது தொழிற்றுறையை மட்டும் பாதித்திருக்கவில்லை. இது அனைத்து உழைப்பாளிகளையும் பாதித்துள்ளது.

அத்துடன், கடலுணவில் இது பரவுவதாக சிலரது போலிப் பிரசாரங்களால் மக்களிடையே கடலுணவு விற்பனையில் சிறு பின்னடைவு காணப்பட்டது. ஆனாலும், இது மனிதரிடமிருந்து மனிதருக்கு பரவுவதால் நோயுற்ற ஒருவர் மரக்கறி வகைகளைத் தொட்டாலும் அதனூடாக பரவும் என்பதே உண்மை நிலையாகும்.

இதேவேளை, மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வு இந்த மாவட்ட மக்களின் நலன்களை முன்னிறுத்தியே நடத்தப்பட்டது. இது ஒரு களியாட்ட நிகழ்வல்ல. இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கோரி எவரையும் வற்புறுத்தியும் அழைத்திருக்கவில்லை.

அத்துடன், இந்த நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த கட்டுப்பாடுகள் சுகாதார தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நிகழ்வு நடைபெற்றதால் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அனைத்து அமைச்சர்களும் அவர்களுடன் வருகை தந்தோரும் சுகாதார முறைகளைப் பின்பற்றி சுகாதாரப் பிரிவினரின் அனுமதியுடனேயே வருகை தந்திருந்தனர்.– எனத் தெரிவித்துள்ளார்.

## கொழும்புத் துறைமுக நகரில் மேலும் 100 கோடி ரூபாவை சீனா முதலிடும்!

கொழும்பு துறைமுக நகரில் மேலும் 100 கோடி முதலீட்டை சீனா மேற்கொள்ளவுள்ளது.

ஹொங்கொங்கை தளமாகக் கொண்டு இயங்கும் ஐ.எவ்.சி. எனப்படும் சர்வதேச நிதி மையம் இந்த நிதி முதலீட்டைச் செய்யவுள்ளது.

தற்போது சர்வதேச நிதி மையத்தின் முதலீடுகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்காகக் காணப்படுகின்ற சட்டவாக்க வரைவுகளை இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் முன்னெடுக்கப்படுகின்றது.

இதனையடுத்து இந்த மாத இறுதிக்குள் அதற்கான நாடாளுமன்ற அங்கீகாரம் பெறப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு நாடாளுமன்றம் அங்கீகாரம் பெறப்பட்டவுடன் சர்வதேச நிதி மையம் தனது முதலீடுகளை 2021 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து முன்னெடுக்கவுள்ளது.

இந்த முதலீடுகள் துறைமுக நகரத்தின் ஒட்டுமொத்த திட்டங்களினதும் முன்னோடித் திட்டத்துக்கானதாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாடுகளிலிருந்து சிலர் நாடு திரும்பினர்!

மூன்று மத்திய கிழக்கு நாடுகளில் தங்கியிருந்த 71 இலங்கையர்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நாடு திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமான், டுபாய் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தங்கியிருந்த இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனையடுத்து அவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் அரச நிறுவனங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சேவையாளர்கள்!

ஊரடங்கு உத்தரவு இன்று தளர்த்தப்பட்டாலும் அரச நிறுவனங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரமே சேவையாளர்களை இணைத்துக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அறிவித்துள்ளது

சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தலை நோக்காகக் கொண்டு, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், இன்று ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும், அரச நிறுவனங்களில் அத்தியாவசியமானவர்களை மாத்திரம் சேவைக்கு அழைக்குமாறு நிறுவனப் பிரதானிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவைக்கு அழைக்கப்பட வேண்டிய அலுவலக ஊழியர்கள் தொடர்பில் நிறுவன பிரதானிகளால் தீர்மானம் மேற்கொள்ள முடியு மென பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி கூறியுள்ளார்.

ஏனைய ஊழியர்களை, தற்போது வீடுகளிலிருந்து பணிபுரியும் முறைமையை தொடர பணிக்கு மாறும் அவர் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் உட்பட பல பகுதிகளில் தற்போது அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்று 9 ஆம் திகதி (திங்கட்கிழமை) அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படவுள்ளது.

எனினும் சில மாவட்டங்களின் பொலிஸ் பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்பதுடன், அவை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டு மக்களுக்கு ஆசி வேண்டி வவுனியாவில் விசேட திருப்பலி!





கொரோனா தாக்கத்தில் இருந்து விடுபட அருளாசி வேண்டி வவுனியா கிறிஸ்தவ ஆலயத்தில் விசேட திருப்பலி ஆராதனை ஒன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

பிரதமரின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கையில் வாழுகின்ற மக்கள் அனைவரும், கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக, அருளாசி வேண்டி நாடு முழுவதிலும் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட ஆராதனைகளில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆலய பங்கு தந்தை ஜெயபாலன் தலைமையில் இந்த விசேட திருப்பலி ஆராதனைகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு ஆசி வேண்டியும், கொரோனா தாக்கத்தில் இருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் காத்து, அவர்களுக்கு நீண்ட ஆயுள் வேண்டியும் விசேட திருப்பலி ஆராதனை இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், மாவட்ட அரச அதிபர் சமன்பந்துல, பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# நீதியரசர்கள் நியமனங்களுக்கான பரிந்துரை; சட்டமா அதிபரின் தரப்பில் கடும் ஆட்சேபனை

20 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் விரிவாக்கப்படவுள்ள உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்கள் வெற்றிடங்களுக்கு தனது துறையின் மூத்த உறுப்பினர்களை புறக்கணிக் கின்றமை தொடர்பாக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்த சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இந்த நியமனங்களை வழங்குவதற்கான முழு அதிகாரமும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதற்கான பரிந்துரைகளை வழங்க அரசமைப்பு சபைக்கு பதிலாக புதிதாக நிறுவப்பட்ட நாடாளுமன்ற சபை ஆறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் பெயர்களைப் பரிந்து



ரைத்துள்ளது.

இவர்களே 11 முதல் 17 வரை விரிவாக்கப்பட வேண்டிய உயர் நீதிமன்றத்தில் உள்ள வெற்றிடங்களுக்குப் பெயர்களை பரிந்துரைப்பர்.

அந்தவகையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் ஏ.எம்.டி. நவாஸ் மற்றும் நீதியரசர்கள் குமுதினி விக்ரமசிங்க, ஸ்ரீரான் குணரத்ன, அச்சலா வெங்கப்புலி, மஹிந்த சமயவர்தன மற்றும் ஜனக டி சில்வா ஆகியோரின் பெயர்கள் ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாடாளுமன்ற சபையில் அரசாங்கத்தின் சார்பாக மிக உயர்ந்த பிரதிநிதியாக உள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சட்டமா அதிபர் தனது ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளார் என வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி உயர் நீதிமன்றத்தில் காணப்படும் வெற்றிடங்களை கணிசமான ஆண்டு சேவையுடன் கூடிய சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த உறுப்பினர்கள் எவரும் பரிசீலிக்கப்படவில்லை என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இந்த வெற்றிடங்கள் தொடர்பாக பரிசீலிக்க 04 பேர் கொண்ட மேலதிக தலைமை வழக்குரைஞர்களையும் சட்டமா அதிபர் பரிந்துரைத்துள்ளார்.

இந்நிலையில் பிரதமர் தனது மூத்த ஆலோசகர்களில் ஒருவரான லலித் வீரதுங்கவிடமிருந்து இந்த விடயங்களைத் தெளிவுபடுத்தியதோடு, நிலைமை தொடர்பாகவும் ஆராய்வதாகவும் சட்டமா அதிபரிடம் கூறியுள்ளார்.

இதற்கிடையில், மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு 12 முதல் 20 வரை விரிவாக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, பதவிகளுக்கு பரிசீலிக்கப்பட வேண்டிய 15 உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தொடர்பான விவரங்களுக்கு ஜனாதிபதி அலுவலகம் அழைப்பு விடுத்துள்ளது.

அங்கம் 07

# இலங்கை – இந்திய ஒப்பந்தம்:

# ஒரு வரலாற்றின் திசை நோக்கு

சிரேஷ்ட சட்டத்தரணி செ. ரவீந்திரன்
(தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் - T.R.R.O)
ஆஸ்திரேலியா

ஈங்கள் தமிழர் தகவல் நிலையத்தின் சென்னை இயக்குநரும் முன்னைய Saturday Review ஆசிரியருமான சிவநாயகம் Lanka Guardian இதழுக்கு எழுதிய கட்டுரையில் 'இவர்களின் பேச்சுவார்த்தைகளின் தாற்பரியம் புதிராக இருக்கிறது.இதனால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை வந்து விளையப்போகிறது..? இனிமேல் இதுவே தமிழர்களினதும் மற்றும் பலரினதும் கேள்வியாகவுள்ளது. புலிகளின் அரசியல் தீர்மானம் ஒரு சுதந்திர தமிழீழமென்பதே. இதனை இப்படியான பேச்சுவார்த்தைகள் மூலம் அடைந்துவிட முடியுமானதாக இருந்தால் இவ்வளவு போராட்டங்களும் உயிர்த்தியாகங்களும் அழிவுகளும் நடந்திருக்கத் தேவையில்லை.

'ஆகவே அத்தகைய தாற்பரிய கோட்பாடுகளை விட்டுவிட்டு, இரண்டு தரப்பும்தங்கள் தங்கள் தற்காலிக தேவைகளிலிலேயே செலுத்துவர். இதனால் தமிழருக்கு நடக்கப்போவது ஒன்றும் இல்லை.' என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையின் பிரதிநிதிகள் இந்தியப்படைகளின் வெளியேற்றத்துக்கு புலிகள் உதவ வேண்டும் அது நடைபெற்றதும் புலிகளோடு ஏற்படும் அடிப்படை இணக்கத்தில் வட – கிழக்கு மாகாணத்தினை அவர்களின் அதிகாரத்திற்கு கொண்டுவருவது என்ற உத்தரவாதத்தை வழங்கினர்.

இதன் எதிர்மறையாக வடக்கு – கிழக்கு மாகாண சபையின் முதல்வர் வரதராஜப்பெருமாள், தமிழ்த் தேசிய படை (Tamil National Army) ஒன்றை இந்தியப்படைகளின் பாதுகாப்போடு அமைத்தார். அது தங்களை முற்றாக அழிக்கவே என்று புலிகள் வாதித்து, அவர்களை எதிர்த்துப்போராடி அழிப்பதற்கான முன்னேற்பாடுகளின் ஊடாக இந்தியப்படைகளையும் தாக்குவதற்குதிட்டம்வகுத்தனர். அதற்காக பிரேமதாஸவிடம் ஆயுதங்களும்பெற்று, இலங்கை அரசினது படையணிகளின் முகாம்களையும் பயன்படுத்துவதற்கு சம்மதமும் பெற்றனர்.




எஸ். தொண்டமான்

அழிவுகள் தொடங்கின. அதனால் இந்தியப்படைகள் வெளியேறவேண்டும் என்று பிரேமதாஸ கடுமையாக நின்றார். அந்தக் காலகட்டத்தில், முக்கியமாக புலிகளை ஜனநாயக அரசியலுக்கு வருமாறு கேட்டு, புலிகளின் மக்கள் முன்னணி (P F L T) என்ற கட்சியையும் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்து அவர்கள் மாகாணசபைக்கு போட்டியிட்டு பொறுப்பெடுக்கவும் பாதை சமைக்கப்பட்டது.

இடையில் தென்பகுதியில் ஜே.வி.பி.யை அடக்கும் முயற்சிகளை தீவிரப்படுத்தியது பிரேமதாஸவின் அரசு. அதன் தலைவர்களான விஜேவீராவும் உபதிஸ்ஸ கமநாயக்காவும் கைதுசெய்யப்பட்டு படைகளின் காவலில் வைத்தே கொல்லப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளால் சிதறுண்ட ஜே.வி. பி .யினர் பலருடன் இந்திய உளவுப்பிரிவு (RAW) தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கு இந்தியாவில் புகலிடம் தந்து பின்னர் வேறுநாடுகளில் தஞ்சம்கோர உதவிகள் செய்தது.



சோமவன்ஸ அமரசிங்க

அப்படி வெளியேறியவர்களில் தமிழர்களின் போராட்டத்தை வன்மையாக எதிர்த்த சோமவன்ஸ அமரசிங்கவும் முக்கியமானவர். அவர் பின்னர்இந்தியாவிலிருந்துலண்டனுக்குச்சென்று அங்கு தனது அரசியலைத் தொடர்ந்தார்.

புலிகளின் பணமுதலீடு கருணாநிதியின் தேர்தலுக்குச் சென்றது. அவர்கள் படிப்படியாக தங்களது செயற்பாடுகளை மீண்டும் தமிழ்நாட்டில் பதித்துக் காலூன்றினர்.

ஆக, இந்தியா தனது நலனுக்காக இலங்கைக்கு தலையிடி தருவதற்கு தனது முனைகளை விஸ்தரிக்கவும், அதனால் இலங்கைக்குப் பயங்கர கோபம் வந்தது.

பிரேமதாஸ, இந்தியப்படைகள் வெளியேறவேண்டும் அல்லது தங்களது புலிகளுடனான பேச்சுவார்த்தைகளுக்கு குந்தகம் விளைவிக்காது புலிகளோடு காலவரையறையற்ற போர் நிறுத்தத்திற்கு இந்தியா ஒப்புதல் தரவேண்டும் என்று கோரினார்.



ரோகண விஜேவீரா

ராஜீவ்இதைமறுத்தார். அவருடைய நிலைப்பாடு 'ஒத்துக்கொள்ளப்பட்ட அதிகாரப்பரவல்' இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அது தெளிவாகத் தெரிகிறது. அதனால் அது நடைபெறும் வரை இந்தியப்படைகள் வெளியேறுவதென்ற பேச்சுக்கே இடமில்லை.

மேலும் தொடர்ந்த கடிதங்களிலும் ராஜீவின் பதில்கள் அதனையே உறுதிப்படுத்தின.

'இந்தியா, மற்ற நாடுகளுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களின் புனிதத் தன்மையையும் அதனால் எழும் பொறுப்புகளையும் அதிலிருக்கும் இந்தியாவின் கடமைப் பாட்டையும் நன்கு அறியும். இந்தியா எந்த ஒரு நிலையிலும் அந்தக்கடமைகளிலிருந்து விலகாது', 'இந்தியப் படைகளுக்கு இந்த ஒப்பந்தத்தின் கீழ் இரண்டு நாடுகளுக்கும் என்ன கடமைப்பாடுகள் உண்டு என்பதும் நன்றாகத் தெரியும்.'



அ. வரதராஜப்பெருமாள்

'எங்கள் இரண்டு நாடுகளின் அரசாங்கங்களும் மனச்சாட்சியின் அடிப்படையிலும் சட்டபூர்வமாகவும் தமிழர்களுக்கு அவர்களது தன்னாட்சியை கொடுக்க கடமைப்பட்டுள்ளோம்'. 'பிரேமதாஸ, மிகவும் காரமாக' அது உள்நாட்டு விவகாரம். அதனை தாங்கள் புலிகளுடன் பேசுகிறோம். நீங்கள் இங்கே நிலைகொள்வதுதான் அதற்கு முட்டுக்கட்டை. ஆகவே வெளியேற திகதி குறிப்பிடப்படவேண்டும்' என்று நிர்ப்பந்தித்தார்.

ராஜீவின் பதில், 'அப்படியல்ல, 13 ஆவது ஷரத்து தீர்வாகாது. அது தானும் ஜே.ஆரும் மேலும் நவம்பர் 07 ஆம் திகதி 1987 இல் ஏற்படுத்திக்கொண்ட இணக்கங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அப்படியான பட்சத்தில் அவை நடைமுறைக்கு வர இந்தியப்படைகள் பகுதி பகுதியாக வெளியேறுவதற்காக ஒரு நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கவேண்டும்' என்று பதிலளித்தார்.

அதைத்தொடர்ந்து பிரேமதாஸ, 'தான் நாட்டின் படைகளுக்கு ஏகோபித்த தளபதி. நாட்டிற்குள் இருக்கும் சகல படைகளும் தனது கட்டளைக்கு அடிபணியவேண்டும். தான் இந்தியப்படைகளை அவர்களது இராணுவத்தளங்களுக்குள் முடங்க கட்டளை பிறப்பித்தால், அவர்கள் முடங்கத்தான்வேண்டும்' என்று கேட்டு பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவைத் தூதனுப்பினார்.

அது பலிக்கவில்லை. ராஜீவ் அவ்வாறு முடியாது, ஒப்பந்தத்தின் பிரகாரம், இலங்கைப்படைகள் முடக்கப்பட்ட நிலையிலேயே இருக்கவேண்டும் என்றும் தமிழர்களின் தன்னாட்சி உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நிலைமை இவ்வாறு மோசமாகவும், பிரேமதாஸ அமைச்சரவையை கூட்டி ஆலோசனை கேட்டார். அமைச்சர்கள், இலங்கைப் படையினர், நேரடியாக இந்தியப் படையினருடன் முரண்படுவதை விரும்பவில்லை. புலிகளுடன் சேர்ந்து அவர்களுக்குத் தரப்படும் தலையிடியையே தொடர்வது நல்லது என்றும் அமைச்சர் தொண்டமானை இந்தியத்தூதுவருடன்பேசி முரண்பாட்டை தவிர்க்குமாறும் வேண்டினர். அமைச்சரவை குறித்துத் தந்த சமாதான ஏற்பாட்டுடன் தொண்டமான் இந்தியத்தூதுவரை சந்தித்தார். தூதுவர் அதற்கு இணங்காமல் இந்திய அதிகாரிகளுடன் பேசிவிட்டு மாற்று நிபந்தனைகளை குறித்தனுப்பினார்.




உபதிஸ்ஸ கமநாயக்க

அதன் முக்கிய சாராம்சம்:

'கொழும்பு, தமிழர்களது தன்னாட்சியை உறுதிப்படுத்தினால், இந்தியப்படைகள் மகிழ்ச்சியோடு வெளியேறும். தமிழர்கள் பின்னாளில் ராஜீவ் தங்களை ஏமாற்றிவிட்டார் என்று சொல்வதற்கு இடமளிக்கமாட்டேன்.' என்பதுதான்.

தொண்டமானின் தொடர்ந்த ஈடுபாட்டினால், இலங்கை தூதுக்குழு டெல்லிக்கு விரைந்து வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவுடனும் இந்திய அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தியதன் முடிவில், பிரேமதாஸவின் சில நடவடிக்கைகள் கைவிடப்பட்டு, இந்தியாவும் தனது படைகளை திருப்பியழைக்க காலக்கெடுவுக்கு சம்மதித்தது.

நரசிம்மராவ் விரும்பியவாறு இந்தியப்படையின் ஒரு பகுதியை இலங்கை மண்ணில் இருக்க முதலில் புலிகள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள், தாமும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்என்பது இலங்கை தூதுக்குழுவின் நிலைப்பாடாக இருந்தது.



இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர்

ஆனால், இந்திய அரசியலில் மாற்றங்கள் வந்தன. ஜனவரி 31, 1990 இல் வி.பி. சிங் பிரதமரானார். ஐ.கே. குஜ்ரால் வெளிவிவகார அமைச்சரானார். இவர்கள் இருவரும் இலங்கைக்கான கொள்கைகளை மாற்றினர். ஒப்பந்தம் நோக்கங்களை நிறைவேற்றவில்லை. இந்தியா இதுவரை வெளியேறாதது அந்தக் கொள்கையின் நடைமுறைப்படுத்தலின் தவறு என பிரேமதாஸவுக்கு நேசக்கரம் நீட்டினர். வி.பி. சிங், தமிழக முதல்வர் கருணாநிதியை அணுகி, புலிகளுக்கும் ஈ.பி. ஆர். எல். எவ். உட்பட ஏனைய இயக்கங்களுக்குமிடையே உரையாடி அவர்களை இணைந்து செயற்படுவதற்குரிய ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை மேற்கொள்ளுமாறு கோரினார்.



பி.வி. நரசிம்மராவ்

கொழும்பில் ஹில்டனிலிருந்த பாலசிங்கமும் யோகியும் கருணாநிதியின் அழைப்பினை ஏற்று சென்னை சென்றார்கள். ஈ.பி. ஆர். எல். எவ். மாகாண சபையை விட்டு விலகி அதனை தங்களிடம் தரவேண்டும், அல்லது மற்றும் ஒரு புதிய தேர்தலுக்கு இணங்கவேண்டும் என்பது புலிகளின் நிபந்தனையாக இருந்தது.

ஆனால், குறிப்பிட்ட ஈ.பி. ஆர். எல். எவ். இயக்கம் அச்சபையை இணைந்து நடத்தலாம் எனவும் புலிகளின் ஆயுதங்கள் களையப்படாமல் மற்றும் ஒரு தேர்தலுக்கு ஒத்துக்கொள்ளமுடியாது என்பதில் உறுதியாக நின்றது. பல சுற்றுப்பேச்சுக்களால் சமரசம் ஏற்படவில்லை. ஆனால், புலிகளுக்கும் கருணாநிதிக்கும் இடையில் நெருக்கம் வளர்ந்தது.

புலிகளின் பண முதலீடு கருணாநிதியின் தேர்தலுக்குச்சென்றது. அவர்கள் படிப்படியாக தங்களது செயற்பாடுகளை மீண்டும் தமிழ்நாட்டில் பதித்துக் காலூன்றினர்.

இந்தியப்பிரதமர் வி. பி. சிங்கின் ஏற்பாட்டில் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்தியப்படைகள் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி வெளியேறும் என்ற அறிவிப்பு வெளியானது. (11 ஆம் பக்கம் பார்க்க...)

# அன்டிஜென் பரிசோதனை அறிமுகமானாலும் பி.சி.ஆர். பரிசோதனை குறைக்கப்படமாட்டாது!

கொழும்பு, நவ.09

நாட்டில் கொரோனா தொற்றைக் கண்டறிவதற்கான புதிய விரைவான அன்டிஜென் பரிசோதனை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் தற்போது நடத்தப்படும் பி.சி.ஆர். சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

புதிய, விரைவான ஆன்டிஜென் சோதனை அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது நாட்டில் நடத்தப்படும் பி.சி.ஆர்.சோதனைகளின் எண்ணிக்கையில் எந்தக் குறைப்பும் இருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பி.சி.ஆர். சோதனை தொடர்பாக நிலவிய பிரச்சினைகள் இப்போது சரிசெய்யப்பட்டு, தற்போது அதிகபட்ச அளவில் நாளொன்றுக்கு பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மைய நாள்களில் முல்லேரியா வைத்தியசாலை யில் பி.சி.ஆர். இயந்திரம் சரியாகச் செயற்படாதமையால் பரிசோதனை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதாக சுதத் சமரவீர கூறினார்.

இதற்கிடையில், பி.சி.ஆர்.சோதனைக்கு மாற்றாக இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள அன்டிஜென் அடிப்படையிலான விரைவான நோயறிதல் பரிசோதனையின் தரத்தை மருத்துவ நிபுணர்கள் குழு தற்போது ஆய்வு செய்து வருகிறது.

வைரஸ் உள்ள எந்தத் தரப்பினரை அன்டிஜென் சோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்பதை அறிய நிபுணர் குழு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய சோதனை முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம், பி.சி.ஆர். சோதனையை விடக் குறுகிய காலத்திற்குள் முடிவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு பி.சி.ஆர்.சோதனைக்கு பயன்படுத்தப்பட்டமையைப்போல பெரிய இயந்திரங்கள் எதுவும் தேவை யில்லை என்றும் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீமத் மிருத்யுஞ்ஜய ஹோமம்!



கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஸ்ரீமத் மிருத்யுஞ்ஜய ஹோமம் நடத்தப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள வேண்டுகோளின் அடிப்படையில் பௌத்த மத விவகார புத்தசாசன அமைச்சு மற்றும் இந்து கலாசாரத்திணைக்களம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் இந்த மகா ஹோமம் நடத்தப்பட்டது.

இந்த நாட்டில் இருந்து கொரனா தொற்று நீங்கி நாடு சுபீட்சமான நிலைமையை அடையவேண்டும் என இதன்போது பிரார்த்தனை செய்யப்பட்டது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்களால் நடத்தப்பட்ட ஹோம வழிபாட்டில் ஆலயத்தின் வண்ணக்கர்கள், இந்துகலாசார திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் கே.குணநாயகம் உட்பட சிலர் பங்கேற்புடன் சுகாதார வழிமுறையின் கீழ் இந்த ஸ்ரீமத் மிருத்யுஞ்ஜய ஹோமம் நடாத்தப்பட்டது.

நாட்டில் அனைத்து மக்களும் நோய்நொடியின்றி வாழவேண்டும், இறைவனின் அவதாரமாக உள்ள சுகாதாரதுறையினரின் அறிவுறுத்தல்களை மக்கள் பின்பற்ற வேண்டும் என இங்கு கருத்துத் தெரிவித்த கொக்கட்டிச்சோலைதான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பிரதமகுருசிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்கள் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

## கொரோனா பாதித்த இடங்களை அடையாளப்படுத்த நடவடிக்கை

### விமானப் படைத் தளபதி கூறுகிறார்



கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட இடங்களை அடையாளப்படுத்தும் வரைபடத்தின் தயாரிப்பு இறுதிப் பணிகளை அடைந்திருப்பதாக இலங்கை விமானப்படையின் புதிய தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரண தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 18ஆவது விமானப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள எயார் மார்சல் சுதர்சன பத்திரண கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்து அங்கு சிறப்பு வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

தலதா மாளிகையின் விஜயத்தின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் –

கொரோனா வைரஸ் சீனாவில் பரவ ஆரம்பமாகிய காலகட்டத்தில் அங்கிருந்த இலங்கை பிரஜைகளை முதலில் விசேட விமானம் ஊடாக மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு வரவழைத்தோம். அதன் பின்னர் விமான நிலையத்தில் அவர்கள் தொற்று நீக்கலுக்கு உட்படுத்தப்பட்டார்கள். அந்தப் பணியை விமானப் படையினரே சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

இலங்கையில் கொரோனா ஒழிப்பு பணிகளை ஆரம்பித்ததும் விமானப்படைதான். இதற்காக சிறப்புபயிற்றப்பட்ட சிப்பாய்கள் விமானப்படையில் இருக்கின்றார்கள் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோல விமானப்படைக்கு எதிர் வரும் காலங்களில் மேலும் சில விமானங்களைக் கொள்வனவு செய்யவும் எதிர்பார்க்கின்றோம்.

இந்த கொரோனா காலகட்டத்தில் நாடளாவிய ரீதியில் தொற்று பரவிய இடங்களை அடையாளப்படுத்தும் பணிகள் ஆரம்பமாகி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. விமானப்படையினரின் உதவிமூலம் ஆகாய மார்க்கமாக அடையாளப்படுத்தப்பட்டு இந்த வரைபடம் தயாரிக்கப்படுகிறது.

விமானப்படைமட்டுமன்றிபொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். கொரோனா ஒழிப்பு பணிகளுக்காக விமானப்படையின் ஒத்துழைப்பு எப்போதும் இருக்கும். - எனத் தெரிவித்துள்ளார்.

## மேல் மாகாண ஊரடங்கு நீக்கம் பஸ் கட்டணத்தில் மாற்றம் வருமா?

மேல் மாகாணத்தில் இன்று (திங்கட்கிழமை) தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர், போக்குவரத்து சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்காக கொவிட் போக்குவரத்து கொள்கையொன்று வெளியிடப்படவுள்ளது.

போக்குவரத்து தொடர்பாக 3 நடைமுறைகள் இதுவரையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

சாதாரண நடைமுறையில் போக்குவரத்து முன்னெடுக்கப்படுமாயின் அதாவது ஆசனங்களில் அமர்ந்து கொண்டும் நின்று கொண்டும் பயணிப்பதாயின் கட்டணங்களில் எவ்வித மாற்றமும் இருக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

அப்படியில்லாமல் ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மற்றும் ஓர் ஆசனதுக்கு ஒருவர் என்ற ரீதியில் பயணிப்பதாயின் கட்டணத்தில் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ்.மாவட்ட செயலக ஏற்பாட்டில் நாக விகாரையில் சிறப்பு வழிபாடு!



யாழ்ப்பாணம், நவ.09

கொரோனா தொற்றிலிருந்து நாடும் நாட்டு மக்களும் விடுபட வேண்டி யாழ்.மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகர் நாகவிகாரையில் சிறப்பு வழிபாடு இடம்பெற்றது.

பிரதமரின் வழிகாட்டுதலின் கீழ் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய இலங்கைத் திருநாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக அருளாசி வேண்டி நாடு முழுவதிலும் உள்ள இந்து ஆலயங்களில் விசேட பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் ஆலயத்தில் கொரோனா தொற்றிலிருந்து விடுபட வேண்டியும் நாட்டு மக்களுக்கு அருளாசி வேண்டியும் யாழ் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ் பெரியகுளம் நாகவிகாரையில் விசேட வழிபாடு நடத்தப்பட்டது.

இந்த வழிபாட்டில் யாழ்.மாவட்ட அரச அதிபர், யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர், யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தற்போதுள்ள சுகாதார நடைமுறைக்கு ஏற்ப மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் இந்த வழிபாடு சிறப்பாக இடம்பெற்றது.

## யாழ்.சமுர்த்தி அலுவலகத்துக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்!



சமுர்த்தி ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கொரோனா காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளுக்கு பாராட்டுதல்களையும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு திடீர் விஜயத்தினை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், சமுர்த்தி உத்தியோகஸ்தர்களின் வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோகக்கு எனும் வேலைத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை திட்டம், சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதற்கான ஆய்வு போன்றவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விரிவாகக் கேட்டறிந்தார்.

அத்துடன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் ஆளணி பிரச்சினை தொடர்பாக உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தமையுடன், தற்போதைய சூழலில் மக்களுக்கான சேவைகள் தடையின்றிக் கிடைப்பதற்கு சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் மற்றும் அதிகாரிகளின் செயற்பாடு தொடர்ச்சியானதாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

காலைக்கதிர்

# தமிழ்த் தேசத்தின் பாதுகாப்பில் அக்கறையாகவுள்ளது இந்தியா



## அவர்களுடன் பேசுவோம் என்கிறார் மாவை

கொழும்பு, நவ.08

தமிழினத்தின் விடுதலையிலும் தமிழ்த் தேசத்தின் பாதுகாப்பிலும் இந்தியாவின் தலையீடு அவசியம் என்ற அடிப்படையில் அவர்கள் அக்கறையைச் செலுத்தியுள்ளனர். மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் இந்திய மத்திய அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட விரும்புகின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங் காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலை வர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அரசியல், இராஜதந்திர நகர்வுகள் மிகத் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. சீனாவின் தலையீடுகள், அதற்கு எதிரான நாடுகளின் தலையீடுகள், இந்தியாவின் உரித்து இலங்கையின் பாதுகாப்பில் தங்கியுள்ளது என்பதில் அந்த நாடுகள் அக்கறையாகவுள்ளன.

இலங்கையின் பாதுகாப்பு, குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களின் பாதுகாப்பு, இந்தியாவின் பாதுகாப்புக்கு மிக முக்கியமானதாக இருக்கும், இருக்கின்றது என் றெல்லாம் அவர்கள் கருதுவதால், கூடிய அக்கறை செலுத்துவதாக செய்திகள் மூலம் அறியமுடிகின்றது.

ஆனபடியால், தமிழினத்தின் விடுதலைக்கு, தமிழ்த் தேசத்தின் பாதுகாப்புக்கு இந்தியாவின் தலையீடு அவசியம் என்ற அடிப்படையில் அவர்கள் அக்கறையைச் செலுத்தியுள்ளதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். ஏற்கனவே அவ்வாறு பல விடயங்களைப் பேசக்கூடியதாக இருந்திருக்கின்றது. அப்படி மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் இந்திய மத்திய அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட விரும்புகின்றோம்.

அது இந்திய அரசின் ஒரு தேவைப் பாடாகவும், எங்களுக்கு அதிக தேவைப் பாடாகவும், ஒரு நிகழ்ச்சி நிரலாகவும் இருக்கின்றது. எனவே, அவ்வாறான பேச்சு இடம்பெற வேண்டும் என நாங்க ளும் விரும்புகின்றோம். - என்றார்.

# தனிமைப்படுத்தலில் இருந்த வயோதிபர் ஒருவர் மரணம்!


கம்பஹா, பிங்கிரிய பிரதேசத்தில் வீட்டில் தனிமைப்படுத்தி இருந்த 71 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 30ஆம் திகதி சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், இவருக்கு அப்போது கொரோனா பரிசோதனை செய்யப்பட இருந்த நிலையில், வலுக்கட்டாயமாக அவர் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதையடுத்து அவர் மீண்டும் நேற்று முன்தினம் கடும் சுகயீனதுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதை அடுத்து இன்று உயிரிழந்தார் என்று சிலாபம் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தநிலையில் உயிரிழந்த நபரின் மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது.

# சர்ச்சையை ஏற்படுத்திய சந்திரிகாவின் வாழ்த்து



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமெரிக்க புதிய ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி ஆகியோருக்கு வாழ்த்துதல் கூறியுள்ளார்.

அவரது வாழ்த்துதல் அடங்கிய பதிவு தற்போது பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

“மன்னர்களுக்கு பைத்தியம் பிடித்தால் மக்களுக்கான ஒரே பாதுகாப்பு ஜனநாயகம் மட்டுமே என்பதை அமெரிக்கர்கள் நிரூபித்து விட்டார்கள்” என்ற வாழ்த்து வசனம் மூலம் மறைமுகமாக இலங்கையின் தலைமையையும் சந்திரிகா அம்மையார் சாடியிருக்கின்றார் என்று கூறப்படுகிறது.

# ஜோ பைடனுடன் நெருக்கமாக பணியாற்ற விரும்புகின்றோம்

## வாழ்த்துச் செய்தியில் கோட்டா

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பைடனுக்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனா திபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன், 290 தொகுதிகளைக் கைப்பற்றி 46ஆவது ஜனாதிபதியாகவும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹரிஸ் துணை ஜனாதிபதியாகவும் பதவியேற்கவுள்ளனர்.

இந்தநிலையில், அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ஜோ பைடனுக்கும், துணை ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள கமலா ஹரிஷுக்கும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில் ஜனாதிபதி கோட்ட பாய ராஜபக்ஷவும் ஜோ பைடனுக்கு தனது ருவிட்டர் பக்கத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

குறித்த வாழ்த்துச் செய்தியில் கோட்ட பாய, வரலாற்று ரீதியான உங்களது வெற்றிக்கு வாழ்த்துக்கள் ஜனாதிபதி ஜோ பைடன். மேலும் எமது இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த உங்களுடன் பணியாற்ற எதிர்பார்க்கின்றேன். - என்று பதிவேற்றியுள்ளார்.

# மன்னார் கிராம சேவகர் அடித்துக் கொலை: சக பெண் கிராம சேவகரின் கணவர் கைது!

*(ந.லோகதயாளன்)*

*மன்னார், நவ.08*

*மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் கிராம சேவகர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேகத்தின் பெயரில் சக பெண் கிராம சேவகரின் கணவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*


*இலுப்பைக்கடவையில் இருந்து ஆத்திமோட்டை செல்லும் பாதையில் கடந்த 3ஆம் திகதி மாலை 7 மணியளவில் பயணித்த கிராம சேவகர் இனந்தெரியாத நபர் ஒருவரால் அடித்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.*

*இந்தநிலையில், பொலிஸார் மேற் கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகத்தில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் இறந்த கிராம சேவகருடன் கூடப் பணியாற்றும் பெண் கிராம சேவகரின் கணவர் எனவும், இவர்களுக்கிடையில் கொடுக்கல் - வாங்கல் பிரச்சினை இருந்தது எனவும் தெரியவந்துள்ளது.*

# மேல் மாகாணத்தில் தளர்கின்றது ஊரடங்கு; 23 பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் முடக்கம்

## எதிர்வரும் இரு வாரங்கள் மிகமிகத் தீர்க்கமானவை என்கின்றார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



மேல் மாகாணத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு நாளை காலை 5 மணிக்கு நீக்கப்படுகின்றது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எனினும், ஆபத்தான பகுதிகளாக இனங்காணப்பட்ட 23 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் 12 பொலிஸ் பிரிவுகளிலும், கம்பஹா மாவட்டத்தில் 8 பொலிஸ் பிரிவுகளிலும், களுத்துறை மாவட்டத்தில் 3 பொலிஸ் பிரிவுகளிலும் ஊரடங்கு அமுலில் இருக்கும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிக மிகத் தீர்க்கமானவை எனவும், மக்கள் இந்தக் கொரோனாவின் பேராபத்து நிலையில் பொறுப்புணர்ந்து சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் ஊரடங்கு தொடர்ந்து அமுலில் இருக்கும் பொலிஸ் பிரிவுகள் வருமாறு:-

**கொழும்பு மாவட்டத்தில்**

01) மட்டக்குளி பொலிஸ் பிரிவு
02) முகத்துவாரம் பொலிஸ் பிரிவு
03) புளுமெண்டல் பொலிஸ் பிரிவு
04) கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவு
05) கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவு
06) கரையோர பொலிஸ் பிரிவு
07) ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் பிரிவு
08) மாளிகாவத்தை பொலிஸ் பிரிவு
09) தெமட்டகொட பொலிஸ் பிரிவு
10) வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவு
11) பொரளை பொலிஸ் பிரிவு
12) வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவு

**கம்பஹா மாவட்டம்**

01) வத்தளை பொலிஸ் பிரிவு
02) பேலியகொட பொலிஸ் பிரிவு
03) கடவத்த பொலிஸ் பிரிவு
04) ராகம பொலிஸ் பிரிவு
05) நீர்கொழும்பு பொலிஸ் பிரிவு
06) பமுனுகம பொலிஸ் பிரிவு
07) ஜா - எல பொலிஸ் பிரிவு
08) சப்புகஸ்கந்த பொலிஸ் பிரிவு

**களுத்துறை மாவட்டம்**

01) ஹொரணை பொலிஸ் பிரிவு
02) இங்கிரிய பொலிஸ் பிரிவு
03) வேக்கட கிராம உத்தியோகஸ்தர் பிரிவு

இதேவேளை, குருநாகல் மாவட்டத் தில் குருநாகல் மாநகர எல்லைப் பகுதியிலும், குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவிலும் ஊரடங்கு தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தில் மாவனல்ல பொலிஸ் பிரிவிலும், ரூவான்வெல்லை பொலிஸ் பிரிவிலும் ஊரடங்கு தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மெத்சந்த செவன, மிஹிஜய செவன, மோதர ரன்மிண செவன, தெமட்டகொட சிரிசந்த உயன, மாளிகாவத்தை வீடமைப்பு ஆகிய தொடர்மாடிக் குடியிருப்புகளில் கொரோனாத் தொற்று பரவல் ஆபத்து இருக்கின்ற தால் இந்த வீடமைப்புத் திட்டங்களில் வாழும் பொதுமக்கள் வீடுகளுக்கிடையில் நடமாடுவதைத் தவிர்த்துப் பயணங்களை வரையறுத்து தமது வீடுகளுக்குள்ளேயே தங்கியிருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா தொடர்பான உண்மை நிலைவரத்தை மறைக்கிறது அரசு!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, நவ.09

கொரோனா தொற்று தொடர்பான உண்மையான நிலைவரத்தை மக்களிடம் அரசாங்கம் மறைக்கின்றதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு -

சமூகத்தில் பெரும்பாலானோர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். ஆனால் அரசாங்கம், சமூக ரீதியாகப் பரவவில்லை எனக் குறிப்பிடுகின்றது.

மேலும், கொரோனா அச்சம் காரணமாக பெரும்பாலான கடைகள் மற்றும் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் இளைஞர், யுவதிகள் பெரும்பாலானோர் தொழிலை இழந்துள்ளனர்.

இவர்கள் உட்கொள்வதற்கு உணவு இல்லை. அவர்கள் தங்கி இருந்த விடுதிகளுக்குச் செலுத்தப் பணம் இல்லை. முதலாளிமார்கள் குறித்த விடுதியிலிருந்து யுவதி, இளைஞர்களை அகற்ற முயற்சிக்கிறார்கள்.

ஆகவே, இவற்றை எல்லாம் அரசாங்கம் கவனத்திற்கொண்டு உடனடியாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதான குருதி வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, நவ.09

இலங்கையின் பிரதான குருதி வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரத்த வங்கியின் பணிப்பாளர் வைத்தியர் லக்ஸ்மன் எதிரிசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் கொரோனா நோய்த் தொற்று நிலைமைகளால், நோயாளிகளுக்குக் குருதி வழங்குவதில் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக் காலமாகவே இரத்ததான நிகழ்வுகள் நடத்துவதில் பெரும் நெருக்கடி நிலைமை காணப்பட்டமையால் குருதி வங்கியில் போதியளவு கையிருப்பு கிடையாது என அவர் கூறியுள்ளார்.

ஊரடங்குச் சட்டம் காரணமாக இரத்த தானம் செய்ய வரும் கொடையாளர்களுக்கு வருகை தர முடியாதுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருதிக்கு நிலவி வரும் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு கொடையாளர்கள் இரத்த தானம் செய்ய முன்வர வேண்டுமென அவர் மக்களிடம் கோரியுள்ளார்.

அத்துடன் நடமாடும் இரத்த சேகரிப்பு நடவடிக்கையானது நீண்ட காலமாக செயற்படுத்தப்படவில்லை எனவும், விசேடமாக மேல் மாகாணத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையைத் தொடர்ந்து இரத்த தான நிகழ்வு பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய இரத்த பரிமாற்று மையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் இரத்த தானம் செய்வதற்கு முன்வருபவர்களுக்கு அவர்களுக்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளமையோடு, தகவல்களைப் பெற்றுக் கொள்ள தேசிய இரத்த பரிமாற்று மத்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# எந்த இராஜதந்திரப் பதவியும் ஓய்வின் பின் ஏற்கமாட்டேன்!

## மஹிந்த தேசப்பிரிய திட்டவட்டம்



தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து அடுத்த வாரம் ஓய்வு பெறவுள்ள நிலையில் தனக்குக் கிடைத்த இராஜதந்திர பதவிக்கான சலுகைகளை ஏற்க மறுத்துள்ளார் என மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மூன்று உறுப்பினர்களைக்கொண்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதவிக் காலம் இந்த ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி முடிவடைகிறது.

இந்நிலையில் இராஜதந்திர பதவியைப் பெற்று வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான திட்டங்கள் தனக்கு முன்வைக்கப்பட்டபோதும் ஓய்வு பெற்ற பின்னர் எந்த இராஜதந்திரப் பதவியையும் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் தனக்கு இல்லை என மஹிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில பத்திரிக்கை ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ள மஹிந்த தேசப்பிரிய, எவ்வாறாயினும் அவருக்கு வழங்கப்படும் பதவி தொடர்பாக குறிப்பிடவில்லை.

கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக செயற்பட்டு வரும் மஹிந்த தேசப்பிரிய, 2015 இல் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

# இரண்டு வருடங்கள் தொடர்ந்து கொரோனாவுடன் வாழவேண்டும்!

## ஜயருவான் பண்டார தெரிவிப்பு



கொரோனா வைரஸுடன் மேலும் இரண்டு வருடங்களுக்கு வாழ வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜயருவான் பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொதுமக்கள் இதற்கு வாழப் பழகிக் கொள்ள வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரண்டாவது கொரோனா அலைக்கு தீர்வைக் காணாவிட்டால், மூன்றாவது அலை உருவாகலாமென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர் என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார்.

மூன்றாவது அலை ஜனவரியில் உருவாகலாம் அது இன்னமும் ஆபத்தானதாகக் காணப்படலாம் என விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# திறமை, தகுதியின் அடிப்படையில் இலங்கை எப்போது ஒரு தலைவரைத் தெரிவு செய்யும்?

## முன்னாள் அமைச்சர் மங்கள கேள்வி



அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸ் தெரிவு செய்யப்பட்டதைப் போன்று இனம், மதம் ஆகியவற்றைப் புறந்தள்ளி திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை எப்போது ஒரு தலைவரைத் தெரிவு செய்யப்போகின்றது என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக ஜோ பைடனும் துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஷும் தெரிவாகியிருக்கின்றனர்.

அமெரிக்காவின் முதலாவது பெண் துணை ஜனாதிபதி என்ற பெருமையை கமலா ஹரிஸ் தனதாக்கியிருக்கும் நிலையில், உலகம் முழுவதிலும் இருந்து அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்த வண்ணமுள்ளது.

அவ்வாறு தனது வாழ்த்துக்களை வெளிப்படுத்தும் விதமாக மங்கள சமரவீர தனது ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

நம்மைச் சார்ந்த பெண்ணொருவர் உலகிலேயே மிகவும் பலம் பொருந்திய பெண்ணாக மாறியுள்ளமை தெற்காசியாவைச் சேர்ந்த அனைவரும் பெருமிதம் கொள்ளத்தக்க விடயமாகும். இதனைப் போன்று இனம், மதம், சாதி போன்றவற்றை விடுத்து திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை எப்போது ஒரு தலைவரைத் தெரிவு செய்யப்போகின்றது? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# புதிய வழிகாட்டல்கள் அடங்கிய கோவை அறிமுகம் செய்யப்பட்டது

கொழும்பு, நவ.09

55 துறைசார் பிரிவுகள் பின்பற்ற வேண்டிய புதிய வழிகாட்டல்கள் அடங்கிய கோவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டாலும் மூன்றாவது கொரோனா அலை உருவாகும் சூழலில் 55 துறைசார் பிரிவுகள் பின்பற்ற வேண்டிய புதிய வழிகாட்டல்கள் அடங்கிய கோவையே இவ்வாறு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஆடைத்தொழிற்துறை, போக்குவரத்து, வாடகை போக்குவரத்து சேவை, வருமான மீட்டும் சேவைகள், அரச அலுவலகங்கள், தனியார் சேவைகள், பல்பொருள் அங்காடிகள், கடைகள், நிதி நிறுவனங்கள், வங்கிகள், ஆடை விற்பனை நிலையங்கள், விவசாயம், பொருளாதார மத்திய நிலையங்கள், பேக்கரி, வீதியோர விற்பனை கூடங்கள், நடமாடும் விற்பனையாளர்கள் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்தவர்களுக்காக இந்த விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1.5 மீற்றர் சமூக இடைவெளியைப் பின்பற்றும் விதத்தில் பல்பொருள் அங்காடிகள் மற்றும் கடைத் தொகுதிகளில் ஏற்பாடுகளைச் செய்வதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெறும் இடங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், தனியார் வகுப்புகள், உள்ளக நிகழ்வுகள், திறந்தவெளி நிகழ்வுகள், ஒன்றுகூடல்களுக்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளமையுடன், திரையரங்குகள், சிறுவர் பூங்காக்கள், மிருகக்காட்சி சாலைகள், விழாக்கள், இசை நிகழ்ச்சிகள், கரையோர விருந்துகள், நீர் தடாகங்கள், சூதாட்ட நிலையங்கள், இரவு நேர களியாட்ட விடுதிகள், மசாஜ் நிலையங்கள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனாவில் இருந்து மேலும் 562 பேர் குணமடைந்துள்ளனர்!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 562 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 723 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 419 ஆக காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 100 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 297 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர். மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 34 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நீண்ட 47 வருடஅரசியல் வாழ்வின் பின்னர் 46 ஆவது அமெரிக்க அதிபராகிறார் பைடன்

பாரிஸிலிருந்து க.குமாரதாஸன்

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக வெற்றிவாகை சூடியிருக்கும் ஜோஸப்ரொபினட் பைடனின் (Joseph Robinette Biden) நீண்ட 47 வருட கால அரசியல் வாழ்க்கை பல ஏற்ற இறக்கங்களைக் கொண்டது.

நவம்பர் 20, 1942 இல் பென்சில்வேனியாவில் வசதியான குடும்பம் ஒன்றில் பிறந்தவர் பைடன். பல்கலைக்கழகப் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு வியட்நாம் யுத்த காலப்பகுதியில் அவர் அமெரிக்க இராணுவத்தில் இணைந்தார். ஆனால் அஸ்மா நோய் காரணமாக சேவையில் இருந்து பின்னர் விலக்கப்பட்டார்.

பலரதும் ஆச்சரியத்துக்கு மத்தியில் 1972 இல் தனது 30 ஆவது வயதில் Delaware மாநில செனட்டராகத் தெரிவாகினார். அடுத்த சில நாள்களில் - நத்தார் தினத்துக்கு முதல் நாள் - கார் விபத்து ஒன்றில் அவரது முதல் மனைவியும் கைக்குழந்தையான மகளும் உயிரிழக்க நேர்ந்தது. செனட்டராக பதவியேற்கும் நிகழ்வுக்கு அவர் மருத்துவமனையில் இருந்தே வரவேண்டி ஏற்பட்டது. அதே விபத்தில் படுகாயமடைந்த மற்ற இரண்டு ஆண் பிள்ளைகளையும் வீட்டில் வைத்துப் பராமரிப்பதற்காகத் தனது செனட்டர் பதவியைத் துறக்க விரும்பினார். ஆனால் அன்றைய செனட் குழுத் தலைவரின் வற்புறுத்தலால் பின்னர் அந்த முடிவைக் கைவிட்டார்.

1970 களில் பெரும்பாலும் வெள்ளை இனப் பிள்ளைகள் கற்கும் பாடசாலைகளுக்குக் கறுப்பினக் குழந்தைகளை அனுப்பிவைப்பதற்காக தனியான பஸ் போக்குவரத்தை (busing) அறிமுகம் செய்த அரசின் கொள்கையை பைடன் கடுமையாக எதிர்த்தார்.

அது கறுப்பினத்தவர்கள் மத்தியில் அவரது செல்வாக்கு வளரக் காரணமாகியது.

1987 இல் குடியரசுக்கட்சி வெள்ளை மாளிகைக்கான போட்டிக்குள் நுழைந்த போது அக்கட்சியின் சார்பில் அதிபர் பதவிக்குத் தகுதியானோரில் ஒருவராக பைடனும் இருந்தார். ஆனால் அடுத்தவரது கருத்துக்களைத் திருடி தனது பிரசார உரைகளுக்குப் பயன்படுத்தினார் என்று எழுந்த சர்ச்சை காரணமாக போட்டியிலிருந்து அவர் விலக நேர்ந்தது. பின்னாளில் பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் தலைவராக விளங்கிய நெய்ல் கின்னொக்கின் (Neil Kinnock) உரையையே 'கொப்பி அடித்தார்' என்பதை பைடன் பின்னர் ஒப்புக்கொண்டார்.

தனது அரசியல் பயணத்தில் 1991 இல் செனட் சபையின் சக்திவாய்ந்த நீதித்துறைக்குழுவின் தலைவரானார் பைடன்.

செனட்டின் வெளிவிவகாரக் குழுவின் தலைவராக இருந்த சமயம் 2002 ஆம் ஆண்டு ஈராக் போருக்கு அங்கீகாரமளிக்கும் தீர்மானத்தை ஆதரித்தார். அதிபர் சதாம் ஹூசைன் பேரழிவு ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கிறார் என்று திரட்டப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த போரை ஆதரித்த பைடன், பின்னர் சதாமுக்கு எதிரான அந்த சாட்சியங்கள் ஆதாரமற்றவை என்பது தெரியவந்த போது பின்னோக்கிய பார்வையில் அது ஒரு தவறு என்று ஒப்புக்கொண்டார்.

அமெரிக்க வரலாற்றில் ஒரு சிங்கம் என்று பைடனைப் புகழ்ந்துள்ள பராக் ஒபாமா, 2008 இல் அவரைத் தனது உப ஜனாதிபதி வேட்பாளராக்கிக் கொண்டார். 2009 இல் வெள்ளை மாளிகைக்குள் நுழைந்த ஒபாமாவுக்குக் கடைசிவரை அவரது வெற்றிகளுக்கான வலது கரமாகத் திகழ்ந்தவர் பைடன்.

வெளிவிவகாரம் உட்பட ஒபாமா நிர்வாகத்தின் பல்வேறு முக்கிய அரசியல் தீர்மானங்களுக்கு பைடனின் அனுபவ ஆலோசனைகள் காரணமாகின.

ஒபாமாவின் இரண்டு தவணைக்கால ஆட்சிக்குப் பின்னர் 2016 இல் அதிபர் தேர்தலில்களமிறங்குவதற்குபைடனுக்கு வாய்ப்பிருந்தது. அமெரிக்க கறுப்பினத்தவர்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் அச்சமயம் அவருக்குப் பரந்தளவு செல்வாக்குக் காணப்பட்டது. ஆனால் தனது மூத்த புதல்வர் மூளைப் புற்றுநோய் காரணமாக உயிரிழக்க நேர்ந்ததால் அச்சமயம் அவரால் அதிபர் தேர்தலில் போட்டியிட முடியாமற்போனது.

கடைசியில் தள்ளாடும் வயோதிபர், தீவிரமான மையவாதி எனப் பலவிதமான விமர்சனங்களுக்கு முகம் கொடுத்தவாறு இந்தமுறை 2020 தேர்தலில் - தனது 77 ஆவது வயதில் - வெள்ளைமாளிகைக்கான போட்டியில் களமிறங்கினார்.

அதிபர் ட்ரம்ப் தனது பிரசார மேடைகளில் தூங்கும் ஜோ (Joe the Sleeping ) என்று பைடனை அடிக்கடிக் கிண்டல் செய்து வந்தார். தனது முதுமை குறித்த ஏளனங்களையெல்லாம் தாங்கிக் கொண்டு இறுதியில் பதவியில் இருந்த அதிபரைத் தோற்கடித்து மிக அதிகப்படியான வாக்குகளுடன் வெள்ளைமாளிகைக்குள் நுழையும் அமெரிக்க அதிபர் என்ற பெருமையைத் தனதாக்கிக்கொண்டார் பைடன்.



1972 இல் கார் விபத்தில் உயிரிழந்த முதல் மனைவி நெய்லா (Neilia), பதின்மூன்று மாதப் பெண் குழந்தை நயோமி (Naomi) மற்றும் பிள்ளைகளுடன் பைடென் தோன்றும் பழைய குடும்பப் படம்.



மக்கள் செல்வாக்கு பெற்ற செனட்டர் பைடன்



முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் (சீனியர்) முன் செனட்டராகப் பதவியேற்பு



ஜிம்மி கார்ட்டருடன் பைடன்



பைடனின் இளம் குடும்பம்

# படகுகளை மீண்டும் ஒப்படைக்க தமிழக மீனவர்கள் கோரிக்கை!

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்புக்குள் அனுமதியின்றி மீன்பித்தனர் என இலங்கை மீன் வளத்துறையினரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இலங்கை கடற்படை முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 121 தமிழக மீன்பிடி விசைப்படகுகளை அழிப்பதற்கு இலங்கை நீதிமன்றங்கள் அனுமதி வழங்கியுள்ளன.

இதற்கு தமிழக மீனவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து கொளகின்றமையுடன் படகுகளை மீண்டும் தமிழக மீனவர்களிடம் ஒப்படைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்புக்குள்ளான மன்னார் மாவட்ட எல்லை மற்றும் ஊர்காவற்றுறை எல்லை கடற்பபரப்பிற்குள் அனுமதியின்றி அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட தமிழக விசைப்படகுகள் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன மாவட்ட மீன் வளத்துறையினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட படகுகளில் ஊர்காவற்றுறை நீதிமன றில் 94 படகுகளும் மன்னார் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 27 படகுகள் என மொத்தமாக 121 விசைப்படகுகள் அழிப்பதற்கு அல்லது ஏலத்தில் விடுவதற்கான அனுமதியை யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் நீதிமன்றங்கள் வழங்கியுள்ளன.

மேலும் இலங்கை கடற்பரப்பிற்குள் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் 37 படகுகள் மன்னார் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அந்த விசைப்படகுகளை விடுவிக்க 2018 ஆம் ஆண்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த அனுமதியையடுத்து தமிழகத்தில் இருந்து இலங்கைசென்ற மீனவ அமைப்புக்கள் 10 படகுகளை மட்டுமே எடுத்துச் சென்றன. தமிழகததுக்கு எடுத்துச் செல்ல முடியாத படகுகளை அங்கேயே விட்டுவிட்டு வந்தனர். இந்த நிலையில் விசைப்படகுகளை அழிப்பதற்கு இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய – இலங்கை மீனவர் பேச்சுவார்த்தை குழு தலைவர் ஜேசுராஜா கூறுகையில், தமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்தனர். பின்னர் இலங்கை அரசு நல்லிணக்க அடிப்படையில் படகுளை விடுவிக்க உத்தரவிட்டது.

படகை மீட்கச் சென்ற தமிழக மீனவ குழுக்களால் 40 படகுகள் மட்டும்மே மீட்க முடிந்தது. எஞ்சிய 121 படகுகள் மீட்க முடியாமல் போன நிலையில் இலங்கை அரசு தமிழகப் படகுகளைத் தமிழக மீனவர்கள் மீட்டு எடுத்து செல்லுமாறு உத்தவிட்டிடுருந்தது.

இந்த நிலையில் கொரோனாத் தொறுக் காரண மாக தமிழக மீனவர்கள் படகுகளை மீட்டுச்செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் இலங்கை நீதிமன்றம் படகுகளை அழிக்குமாறு உத்தரவிட்டு யிருப்பது வேதனை அளிப்பதாக உள்ளது.

பல கோடி ரூபா மதிப்புள்ள தமிழக விசைப்படகு களை இலங்கை அரசு வீணடிக்காமல் மீண்டும் தமிழக மீனவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்ததுள்ளனர் – எனத் தெரிவித்தார்.

**தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பம் மீது தாக்குதல்:**

# 8 பேர் 14 நாள்கள் தனிமைப்படுத்தல்



பருத்தித்துறையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பத்துடன் அடிதடியில் ஈடுபட்ட 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சுகாதார அதிகாரிகள், அவர்களை தனிமைப்படுத்துவதற்கு நேற்றுமுன்தினம் மாலை நடவடிக்கை எடுத்துள்ளனர் கொரோனாத் தொற்றாளர் ஒருவருடன் பழகியமையால் பருத்தித்துறையில் குடும்பம் ஒன்று தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில், அந்தக் குடும்பத்தினர் யாழ்ப்பாணத்துக்குக் கொரோனா கொண்டு வருவதாகக் குற்றம் சுமத்தி அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 2 குடும்பத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் பொலிஸார் குறித்த இடத்திற்கு வருகை தந்து விசாரணை நடத்தினர். அத்துடன் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன் பின்னரே சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை – இந்திய...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸவின் பேச்சுக்களிலும் மாற்றங்கள் தொடங்கின. ஒரு நாடு 'ஒரு மக்கள்' ஒரு சட்டம், அதன் வரையறைக்குள் தனது 3C குறிக்கோளின் பிரகாரம் ஒற்றுமை காணவேண்டும் என்பது போன்ற அறிவு ரைகளை அவர் தொடங்கினார்.

புலிகளின் நிபந்தனைகளில் முக்கியமானவை இரண்டு. அவை:–

முதலாவது – பிரிவினை கோரக்கூடாது என்ற 6 ஆம் ஷரத்து நீக்கப்படல் வேண்டும்.

இரண்டாவது – வடக்கு – கிழக்கில் மகாணசபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்தப்படவேண்டும்.

அதில் புலிகள் தமது அரசியல் பிரிவு PFLTயில் பங்குபற்றும்.

தனக்கு மக்களால் (தவறாகவோ அன்றி சரியாகவோ) தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபையை நீக்க அதிகாரம் இல்லை. இது ஒப்பந்தத்திலும் 13 ஆவது ரத்திலும் வரையப்பட்டது. 06 ஆம் ஷரத்தை நீக்க அரசாங்கத்தில் பலரும் ஏற்கமாட்டார்கள்.

அது தனது அரசியல் நிலையை சிங்கள மக்களிடையே பலவீனப்படுத்தும். ஆகவே மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் பிரேமதாஸ ஆயுதங்களை களையாமல் ஆயுதக்களாசாரம் மறையாது. தேர்தலையும் நடத்த முடியாது. அது ஏற்றுக்கொள்ளத் கூடியது அல்ல என்றும் நிர்ப்பந்தித்தார். இந்தியப் படைகள் வெளியேறுவது நிச்சயமானதும் இலங்கை படைகளுடன் புலிகள் மீண்டும் போராடவேண்டிய நிலை தவிர்க்கமுடியாததாக தோன்றிற்று. அதற்கிடையில் இந்தியப்படைகள் வெளியேறுவதை முன்னிட்டு, வி.பி. சிங், வடக்கு – கிழக்கு மாகாண சபையை கலைத்துவிடுமாறு அதன் முதல்வர் வரதராஜப் பெருமாளுக்கு அறிவுறுத்த விரும்பினார்.

அந்தச்செய்தியை எடுத்துச்செல்வதற்கு இந்தியத்தூதுவர் மல்கோத்ராவை அனுகினார். ஆனால், அதைச் செய்யத் தயங்கிய தூதுவர், அச்சமயத்தில் தூதுவராலயத்தில் செயலாளராக இருந்த ஜெயசங்கரையும் (தற்போதைய இந்திய வெளிவிவகார அமைச்சர்) அவருக்குத் துணையாக மற்றும் ஒரு அதிகாரியையும் அனுப்பினார்.

அவர்கள் சென்றதினம் வரதராஜப்பெருமாள் இந்தியப்படையினருக்கு பிரியாவிடை விருந்தை ஒழுங்கு செய்திருந்தார். தான் சபையை கலைப்பதற்கு உடன்பட முடியாது என்றும் ஆனாலும் அன்றிரவு நடக்கவிருக்கும் பிரியாவிடை நிகழ்வுக்கு ஈ.பி.ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் பத்மநாபா வரவிருப்பதாகவும் அவருடனும் கலந்து ஆலோசித்துவிட்டு, மறுநாள் காலை பதில் அளிப்பதாகவும் கூறினார்.

அந்த கலந்தாலோசனையில் மாகாண சபையை கலைக்காது, அதையே தமிழர்களுக்கான அரசமைப்பு சபையாக மாற்றி, தாங்களே ஒரு தலைப்பட்சமான சுதந்திரம் பிரகடனப்படுத்த தீர்மானித்தனர். அடுத்த நாள் காலை இதுவிடயம் ஜெயசங்கருக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர் அதனை மல்கோத்ராவுக்கு அறிவித்து, தான் அப்போது ஒன்றும் கூறமுடியாது, கொழும்பு சென்றதும் கலந்தாலோசிக்கவேண்டும் என்று பயணமானார்.

(தொடரும்)

## மஞ்சளுடன் சிக்கிய இந்திய மீனவர்கள் 4 பேரும் கொரோனா அச்சத்தால் திருப்பி அனுப்பிவைப்பு

(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து ட்றோலர் படகில் 2 ஆயிரத்து 800 கிலோ மஞ்சளைக் கொண்டு வந்து இறக்கியட்றோலர் படகும் அதில் பயணித்த 4 இந்திய மீனவர்களும் பத்திரமாக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தியாவில் இருந்து ட்றோலர் படகில் மன்னார் அரிப்பு பகுதியில் கற்பிட்டி மீனவர்களின் படகு மூலம் மஞ்சள் இறக்கும் வேளை கடற் படையினரால் முற்றுகையிடப்பட்டது. இதன்போது ட்றோலரில் இருந்த 4 இந்திய மீனவர்களும் இலங்கையைச் சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இருந்தபோதும் ட்றோலரில் இருந்த மஞ்சள் முழுமையாக இறக்கப்பட்டு இலங்கையைச் சேர்ந்த இருவர் மட்டும் கைதுசெய்யப்பட்ட போதும் கொரோனா அச்சம் காரணமாக இந்திய மீனவர்கள் நால்வரும் ட்றோலருடன் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட படகில் இருந்து 2 ஆயிரத்து 800 கிலோ மஞ்சள் மீட்கப்பட்டது. இதே நேரம் இவர்களின் தகவலின் அடிப்படையில் கற்பிட்டிப் பகுதில் 2 ஆயிரத்து 600 கிலோ மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில் மொத்தம் 5 ஆயிரத்து 400 கிலோ மஞ்சள் பைப்பற்றப்பட்டுள்ளது. அதேவேளை, இலங்கையைச் சேர்ந்த இருவரும் 14 நாள்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## சஜித் அணியிலுள்ள ஐவர் மீது விசாரணை

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவருக்கு அரசியல் பழிவாங்கல் பற்றி விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதன்படி ஹரின் பெர்னாண்டோ, சுஜித் பெரேரா, மயந்த திஸாநாயக்க, நளின் பண்டார மற்றும் ஜே.சி.அலவத் துவல ஆகியோர் நாளை ஆஜராக வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த எம்.பிக்கள் 5 பேரும் அண்மையில் இலஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக் குழுவுக்குச் சென்று, மேற்படி அரசியல் பழிவாங்கல் பற்றி விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

# சுகாதார அறிவுறுத்தல்களை நிறுவனங்களில் பின்பற்றாவிட்டால் ஏழு வருடச் சிறை விதிப்பு!

மேல் மாகாணத்துக்குள் திறக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய செயற்பட வேண்டியது கட்டாயமாகும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும் தகவல் திரட்டும் நடவடிக்கைகளின்போது எவரேனும் பொய்யான தகவல்களை வழங்குவார்களானால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், அவர்களை 7 வருடங்கள் வரை சிறை வைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

மேல்மாகாணத்தின் சில பகுதிகளில் இன்றுடன் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படுள்ளது.

இந்த நிலையில் இந்தப் பகுதிகளில் காணப்படும் நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்க முன்னர் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இந்த அறிவுறுத்தல்கள் தொடர்பான விவரங்களை சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

இந்நிலையில் இவ்வாறு திறக்கப்படவுள்ள இத்தகைய நிறுவனங்கள் தங்களது ஊழியர்களுக்கு இடையில் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கும் அளவில் குறைந்தளவான ஊழியர்களையே பணியில் ஈடுபடுத்தியிருக்க வேண்டும்.

இதேவேளை, ஊழியர்கள் தங்களது கைகளைக் கழுவுவதற்கு அல்லது கைகளை சுத்தம் செய்து கொள்வதற்காக உரிய வசதிகளை செய்திருக்க வேண்டும். அவர்களது உடல் வெப்பத்தை அளவிடுவதற்கும் வசதிகள் செய்திருக்க வேண்டும். இதன்போது அனைவருமே முகக் கவசம் அணிவதும் கட்டாயமாகும்.

அதேவேளை இவ்வாறு திறக்கப்படும் நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் வருகைத்தரும் நபர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து வைப்பதற்கும் நிறுவனங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதற்கமைய இவ்வாறு சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் வருபவர்கள், நிறுவனங்களின் இத்தகைய செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இதன்போது உண்மையான தகவல்களை மாத்திரமே அங்கு குறிப்பிட வேண்டும். மாறாக எவரேனும் ஒருவர் பொய்யான விவரங்களை வழங்கியிருப்பாரானால், அவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்ட விதிகள் மற்றும் தண்டனை சட்டக்கோவைக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக குற்றம் நிரூபிக்கப்படும் சந்தேக நபரை 7 வருடங்கள் வரை சிறை வைக்கவும் முடியும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கைதிகள் விடுதலைக்காக தொடர்ந்தும் நான் குரல்கொடுப்பேன்!

## ஆளுங்கட்சி அமைச்சர் இப்படிக் கூறுகிறார்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நான் தொடர்ந்தும் குரல் கொடுப்பேன் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடுக்காமுனை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில் –

இப்பொழுது சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சில வாதப்பிரதிவாதங்களை அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நீதி அமைச்சரிடம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டமையை கேலிக்கூத்தாக எடுத்து பேசி வருகின்றமையை ஊடகங்கள் வாயிலாக எம்மால் அறிய முடிகின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசலாம், பிரதமரிடம் பேசலாம், நீதி அமைச்சரோடும் பேசவேண்டும். கைதிகளின் விடுதலை தொடர்பில் நீதி அமைச்சருக்கும் பங்கு இருக்கின்றது, அவர் நாட்டினுடைய நீதித்துறைக்குப் பொறுப்பானவர்.

300 இற்கும் மேற்பட்ட உயிர்கள் பயங்கரவாத தாக்குதலால் கடந்த ஏப்ரல் 21 இல் பலியாகின. அந்தப் பயங்கரவாதத்தைத் தடுக்காமல் இருந்த அரசுக்கு எதிராக, மக்கள் விடுதலை முன்னணியினர் அந்த நேரத்தில் அரசாங்கத் திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்த போது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை பாதுகாத்த பெருமை எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையே சாரும்.

ஒவ்வொரு முறையும் அரசாங்கத்துக்கு வாக்களிக்கும் பொழுதும், அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்துக்கு வாக்களிக்கும் பொழுதும், பத்து அல்லது இருபது அரசியல்கைதிகளை விடுதலைசெய்தால் தான் வாக்களிப்போம் என்ற நிபந்தனைகளை முன்வைத்து இருந்தால் கடந்த நான்கரை வருடங்களில் பல்வேறுபட்ட பிரச்சினைக்கான தீர்வை கடந்த அரசாங்கத்திடமிருந்து எமது தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்திருக்க முடியும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## டெங்கால் பாதிக்கப்பட்டவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி!

நாட்டில் முதன் முறையாக டெங்கு காய்ச்சலுக்கு உள்ளானவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்டவர் பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடையவர் என அந்த வைத்தியசாலையின் டெங்கு பிரிவின் தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குறித்த நபருக்கு ஏற்பட்ட அதிக காய்ச்சல் காரணமாக வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ளார். அதனைத் தொடர்ந்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட இரத்த பரிசோதனையின் பின்னர் அவருக்கு டெங்கு காய்ச்சல் இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டது.

அதன் பின்னர் அவருக்குத் தொடர்ந்தும் ஏற்பட்ட காய்ச்சலால் 5 ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த நோயாளியை தேசிய தொற்று நோயியல் பிரிவுக்கு சிகிச்சைகளுக்காக மாற்றியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நோயாளர் வீட்டுக்கு மருந்து வவுனியாவிலும் அறிமுகம்!

வவுனியா வைத்தியசாலையில் பதிவுசெய்துள்ள கிளினிக் நோயாளர்களுக்கான மருந்துகளை அவர்களது வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ரி.நந்தகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில் –

தற்போதைய நெருக்கடியான சூழலில் வைத்தியசாலைக்கு வருகைதரும் மக்களின் தொகையை மட்டுப்படுத்தும் நோக்குடன் மத்திய சுகாதார அமைச்சின் **DGHS/COVID 19/347/2020 (III)** ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அஞ்சல் திணைக்களத்தின் ஊடாக அரச வைத்தியசாலையில் பதிவுசெய்துள்ள நோயாளர்களுக்கான மருந்து வகைகளை அவர்களது வீட்டுக்கே கொண்டு சென்று வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்த வகையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கிளினிக்கில் பதிவு செய்து தற்போதைய சூழ்நிலையில் நேரடியாக வந்து மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியாத பொது கிளினிக் நோயாளர்கள் 0740104936 என்னும் தொலைபேசி இலக்கத்துடனும், பொதுவைத்திய நிபுணர்களிற்கான கிளினிக் நோயாளர்கள் **(VP OPD)** 0761001936 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தொடர்புகொண்டு நோயாளரின் பெயர், தற்போதைய வதிவிட முகவரி, கிளினிக் பதிவு இலக்கம், பாவனையிலுள்ள தொலைபேசி இலக்கம், வீட்டுக்கு அருகிலுள்ள தபால் கந்தோரின் விலாசம் ஆகிய தகவல்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை நோயாளர்கள் தங்களின் கிளினிக் தினத்தின், முதல் வாரத்தின் புதன்கிழமைகளில் தங்களுக்குரிய மருந்துகளை பொதி செய்து அஞ்சல் திணைக்களத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக தங்களுடைய விவரங்களை திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் மேற்குறித்த தொலைபேசியினூடாக அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொலைபேசியூடாக அறியத்தர முடியாதவர்கள், தங்கள் கிராம உத்தியோகத்தர் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் ஊடாக மேற்படி விவரங்களை அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வைத்தியரின் ஆலோசனையை நேரடியாகப் பெறவேண்டும் என கருதும் நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வழமைபோன்று சமுகமளித்து வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜோ பைடனுக்கு வாழ்த்து!



அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பைடனுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர் தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன், 290 தொகுதிகளை கைப்பற்றி 46 ஆவது ஜனாதிபதியாகவும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதியாகவும் பதவியேற்கவுள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள ஜோ பைடனுக்கும், துணை அதிபராக தேர்வாகியுள்ள கமலா ஹாரிஸுக்கும் ஏனைய நாடுகளை சேர்ந்த தலைவர்கள் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவும் ஜோ பைடனுக்கு தனது ருவிட்டர் பக்கத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹரீஸிற்கு ருவிட்டர் ஊடாக தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி – 1983.06.08
மதம் – இந்து A– ஆசாரி
நட்சத்திரம் – அச்சுவினி
பாவம் – 29 1/2
கல்வி – பட்டதாரி
தொழில் – அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு – படித்த உத்தியோகப் பெண்.

மணமகள் விவரம்
பிறந்த திகதி – 1991.06.19
மதம் – இந்து V
நட்சத்திரம் – உத்தரம் – 1
பாவம் – 56 1/4
கல்வி – UK பட்டதாரி
தொழில் – கம்பனி முகாமையாளர்
எதிர்பார்ப்பு – இலங்கையிலுள்ள பட்டதாரி மணமகன்.

Kalyanamalai Vada.com

பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir